1263

தொகுதி 7.] 1923ஹு ஜுலைமீ 1ௗ [பகுதி 6.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
...னிசாமி முதலியார்,
...ந்த நிலையம், சென்னை.

...CE OF T...
21 AUG 1923
JL
N211, N22 MY
N28.7-6
186526

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922வரு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இப்போது மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கோலை" "கடற்கொள்ளைக்காரன்" என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்போது "இராஜாமணி அல்லது, ஓர் அபூர்வ மர்மம்" என்ற நாவல் நடந்து வருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் சுமாராக 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | |
| பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | 3 | 0 | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கோலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |

## இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்.

கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன்படங்களுடன் 400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டு அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 2.

---

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

21 AUG 1928 MADRAS

இரங்கராவ்:—"நான் சாப்பாட்டைத் துரிதமாயனுப்புவதற்காகவே சமையலறையிற் போயிருந்தேன். இன்று என் ஆட்களில் ஒருவன் போய்விட்டதால் வேறு ஆளைத்தேட நேர்ந்தது. அதனால்......" என்றதே,

உத்தியோகஸ்தன்:—"ஆ! ஆட்கள் என்றதே நினைவுவந்தது. சிறைச்சாலைக்கு ஆகாரம் கொண்டுவரும் ஆட்கள் இந்த வூரிலிருப்பவர்களாகவும், முக்கியமாக, சிறைச்சாலையிலிருக்கும் கைதிகளுக்கு அறிமுகமானவர்களாகவு மிருக்கலாகாது. இது முக்கியமான விஷயம்" என்றான்.

இரங்கராவ்:—"என்னிட மிருந்து கடந்த இரண்டொரு தினங்களாகச் சிறைச்சாலைக்குச் சாப்பாடு கொண்டு வந்த ஆள் போய்விட்டான். வேறு ஆள் அகப்படாமல் மிகக் கஷ்டப்பட்டேன். கடைசியில் நற்காலமாய் ஒரு ஆள் வேலையில்லாமல் அலைந்துகொண்டு இங்கு வந்தான். அவனுக்குச் சமையல்வேலை தெரியாது. அவன் கப்பலில் மாலுமியாயிருந்தவன். அவனுக்கு நம்மூர்ச் சங்கதியே தெரியாது. கடைசியில் விதியில்லையென்று அவனை யமர்த்திக் கொண்டேன்" என்றான்.

உத்தியோகஸ்தன்:—"பேஷ்; இது மிக்க நலமே. அப்படியாயின், அவனிடமே சாப்பாட்டைக் கொடுத்தனுப்பு. நாங்கள் அதிக சிரத்தையோடு கவனிக்க வேண்டிய அவசியமேயில்லை. அந்த ஆளைமட்டும் எனக்குக் காட்டிவிடு, ஏனெனில் அவன் வந்தால் நான்கூட சிறையாளர் அறைக்குச் செல்லாமல் இவனையே யனுப்பிவிடுவேன்" என்றான்.

186526

இரங்கராவ்:—"தங்களுக்கு அவ்வாறு பிரியமாயிருக்கும் போது, தங்கள் கட்டளை யப்படியிருக்கிற வரையில், நான் ஒருபோதும் அதற்கு மாறாக நடக்கமாட்டேன். இவனிடமே அந்த இரண்டு புதுக் கைதிகளுக்கும் ஆகாரம் கொடுத்தனுப்புகிறேன்" என்றான்.

சிறைச்சாலை யுத்தியோகஸ்தன் "அவர்கள் புதுக் குற்றவாளிக ளல்ல. முன்பு பெரிய பாங்கியில் கொள்ளை யடித்துத் தண்டனை யடைந்தார்களே, தந்தையும் மகனும் அவர்களே. அவர்களோடு உளவாக விருந்தவர்கள் வேறிருக்கிறார்கள். ஆனால் இக்கள்ளப்பயல்கள் தங்கள் உளவாளிகளைக் கூறவேயில்லை......" என்றதே,

இரங்கராவ்:—"ஆகா! அக்கள்ளர்களா? சிறைச்சாலையிலிருந்து எப்படியோ தப்பித்துக்கொண்டு போய் விட்டார்களென்றும், அவர்களைப் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு, அல்லது அவர்கள் ஒளிந்திருக்குமிடத்தைக் கண்டு பிடித்து அறிவிப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிப்பதாய்ப் பிரசுரம் செய்யப் பட்டிருந்ததே, அவர்கள் தானே..." என்றான்.

**உத்தியோகஸ்தன்** :—ஆ! அவர்களே; எங்கள் ஆட்களால் மறுபடி மிக்க சாமார்த்தியமாப் பிடிக்கப்பட்டார்கள்.

இரங்கராவ்:—"ஆ! அத்தகைய கள்ளர்கள் தங்கள் உளவாட்களை வெளியிட மாட்டார்கள். இப்படிப்பட்டவர்களை யடியோடு தொலைத்துவிட்டால் தான் நமது சொத்தும் உயிரும் பத்திரமாக விருக்குமென்று கொஞ்சமேனும் நம்பலாம். இல்லா விட்டால் அந்தோ! என் போன்றவர்களின் கதி என்னாகுமோ கடவுளே" என்று பெரும் பீதியடைந்தவன் போல் நடுக்கத்தோடு கூறினான்.

**உத்தியோகஸ்தன்** :—இச்சமயம் அவர்கள் மறுபடி தப்பித்துக்கொண்டு போகமுடியாது. சிறைச்சாலையில் மிக்க கண்டிப்பான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது பற்றியே அவர்களுக்குச் சாப்பாடு கொண்டு வருகிறவர்களைப் பற்றிக்கூட மிக்க எச்சரிக்கையாயிருந்து வருகிறோம்.

**இரங்கராவ்** —ஆம் ஆம்! இத்தகைய ஆசாமிகளை மிக்க ஜாக்கிரதையாகவே கவனிக்க வேண்டும்.

**உத்தியோகஸ்தன்**:—"சரி! இச் சாப்பாட்டு விஷயத்தில் நான் வீணுய்ச் சிரத்தை யெடுத்துக் கொள்ளவேண்டியதில்லை" என்றான்.

அதற்குள் புதிதாக வந்த ஆள் தன் எஜமானாகிய ஹோட்டல்காரன் எதிரில் வந்து நின்றான். அவன் உத்தியோகஸ்தனுக்கு அவனைக் காட்டி "இவன் தான் நான் கூறிய ஆள்; புதிதாக வந்தவன்" என்றான்.

**உத்தியோகஸ்தன்**:—"மிக்க சந்தோஷம். இத்தகைய ஆள் தான் சரி. சீக்கிரம் இவனிடமே ஆகாரத்தைக் கொடுத்தனுப்பு. இனி வேறு யாரிடமுமனுப்பாதே" என்றான்.

**ஹோட்டல்காரன்**:—தங்கள் கட்டளைப்படியே நடந்து கொள்வேன்" என்றான்.

இரண்டொரு நிமிடங்களில் சிறைச்சாலை உத்தியோகஸ்தன் ஹோட்டல்காரனிடமுள்ள உயர்ந்த குடிவகைகளில் தனக்குப் பிரியமானவற்றைத் திருப்தியாக அருந்திவிட்டுச் சென்றான்.

சுமார் ஒருமணி நேரங்கழித்து மாறுவேட மணிந்த ஏழுமலை சிறையிலிருக்கும் இருவர்க்கும் போசனம் எடுத்துக்கொண்டு சிறைச்சாலைக்குச் சென்று தன்னிடமிருக்கும் அனுமதிச் சீட்டை வாயில் காப்போனிடம் காட்டி

னன். அவன் அதை வாசித்துப் பார்த்து "அதோ அந்த அறையில் இருக்கும் உத்தியோகஸ்தரிடம் செல்; அங்கு உன்னைச் சோதனை செய்துகொண்டு நீ செல்லவேண்டிய விடத்திற்கு அழைத்துச் செல்வார்கள்" என்றான்.

ஏழுமலை முன்பின் தெரியாத ஒரு விடத்திற்கு வராதவன் எப்படி மிரட்சியடைவானோ அதுபோல் மிரண்ட பார்வையோடு காவலன் காட்டிய அறைக்குள் சென்றான். அங்கு சற்றுமுன்தான் ஹோட்டலில் கண்ட உத்தியோகஸ்தனை யுட்கார்ந்திருக்கக் கண்டு பீதியடைந்தவன் போல் மிக்க தாழ்மையாய்க் குனிந்து வந்தன மளித்து "துரையே! தஞ்சாவூர் ஹோட்டலி லிருந்து இரண்டு கைதிகளுக்குச் சாப்பாடு கொண்டுவந்திருக்கிறேன்" என்றான்.

உத்தியோகஸ்தன் "ஆ! சரி" என்றெழுந்து, என் கூட வாவென்று அவனை யழைத்துக்கொண்டு, அங்கிருந்து பெரிய கூடத்தைக் கடந்து நீண்ட ஒரு தாழ்வாரத்தின் வழியாகச் சென்று கடைசியில் இன்னொரு பெரியகூடம் இருக்கும் இடத்திற்குச் சென்றான். அக் கூடத்தின் இருபுறங்களிலும் வரிசையாக அறைகளிருந்தன. ஒவ்வொரு அறையின் கதவின்மேலும் பெரிய வெள்ளை எழுத்துக்களால் இலக்கங்கள் போடப்பட்டிருந்தன.

உத்தியோகஸ்தன் அக்கூடத்தில் நின்றதும் அங்கு காவலிருந்த ஆளைநோக்கி "அடே 40-வது அறையையும் 41-வது அறையையும் திற. இவன் அந்த இரண்டு ஆட்களுக்கும் சாப்பாடளித்து விட்டு அவர்கள் சாப்பிட்டதே பாத்திரங்களை யெடுத்துச் செல்வான்" என்று கூறிவிட்டு ஏழுமலையை நோக்கி "நான் செல்கிறேன். நீ கைதிகளை நீ யார் என்னவென்று ஒன்றுங் கேட்காதே; தெரி

யுமா? போசன மளித்துவிட்டுப் பேசாமல் வெளியில் வந்துவிடு. அவர்கள் பேசினுலும் பேசாதே. தெரியுமா?" என்ருன்.

ஏழுமலை:—"அவர்களிடம் செல்லவே எனக்குப் பயமாக விருக்கிறது. நான் சீக்கிரம் சாப்பாட்டை யளித்து விட்டு வந்துவிடுவேன்" என்ருன்.

உத்தியோகஸ்தன் போய் விட்டான். அங்கிருந்த காவலன் முதல் 40-வது அறையைத் திறந்துவிட்டு 41-வது அறையின் முன்சென்று நின்ருன். ஏழுமலை சாப்பாடு கொண்டுவந்த கூடையோடு அறைக்குள் சென்றதும் உள்ளேயிருந்த பெரியகள்ளன் அவனைக் கண்டு திடுக்கிட்டான். ஆனல் மறுவிநாடியே சாதாரணமாய் விட்டான். அதற்குள் ஏழுமலை சட்டென்று தன்மடியிலிருந்த ஒருகடித உறையை யவனிட மளித்தான். கள்ளன் அதைச் சட்டென்று தன் படுக்கையின்கீழ் சொருகி மறைத்துவிட்டான். ஏழுமலை யதன்பின் கூடையிலிருந்த சாப்பாட்டு மூட்டைகளில் ஒன்றையெடுத்து அக்கள்ளன்முன் வைத்து விட்டு நாற்பத்தோராவது அறைக்குச் சென்ருன்.

ஏழுமலை யந்த அறைக்குள் சென்றதும் காவலன் சென்று நாற்பதாவதறையைப் பூட்டிக்கொண்டு திரும்பி வந்தான். அதற்குள் ஏழுமலை தன்மடியிலிருந்த இன்னெரு கடிதவுறையை யெடுத்துச் சின்னக்கள்ளனுகிய சுப்பனிடம் கொடுத்துவிட்டு இரண்டாவது சாப்பாட்டு மூட்டையை யவன்முன் வைத்துவிட்டு வெளியில் வந்தான். பிற்பகல் வந்து ஏனங்களை யெடுத்துச் செல்ல வேண்டும். பிறகு இரவுதீபம் வைத்ததும் இராப்போஜனம் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்.

போஜன பாத்திரங்கள் கொண்டு போகப்பட்டபின் கதவு பூட்டப்பட்டதும் மூத்த கள்ளனுகிய கேசவன்

தனக்கு வந்த கடித உறையை யெடுத்துப் பிரிக்கத் தொடங்கினன். அச்சமயம் அவன் முகத்தில் ஒருவிதப் பிரகாசமுண்டாயிற்று. உறையைக் கிழித்ததும் அதற்குள் ஒரு கடிதமும், இரண்டு மிக்கக்கூர்மையும் உறுதியுமான அரங்களும், ஒரு சிறு புட்டியில் ஒருவித திராவகமும், கொஞ்சம் கறுப்பு மெழுகும் இருந்தன. அவன் கடிதத்தை முழுமையும் இருமுறை வாசித்துப்பார்த்தான். அக் கடிதம் நான்கு பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது. அதை வாசிக்க வாசிக்க அவன் மனம் மிக்க உற்சாகத்தையும், துணிகரத்தையும், மகிழ்ச்சியையும் அடைந்தது. அச்சாமான்களோடு அக் கடிதவுறையில் ஒரு எழுதாத கடிதமும், ஒரு பென்ஸிலும் கூடவிருந்தன.

கேசவன் சுமார் அரைமணி நேரம் சிந்தித்தபின் இரண்டு கடிதங்கள் எழுதத் தொடங்கினன். ஒன்று தன் நண்பனுகிய வீரப்பனுக்கும் மற்ருென்று தன் புத்திரனுகிய சுப்பனுக்கும் வரைந்தான். ஆனல் அக் கடிதங்களில் வரைந்துள்ள சங்கதிகள் பின்னல் நமது கதையின் தொடர்ச்சியால் வெளியாகுமாதலின் இங்கு அதைப்பற்றி விவரிக்க வேண்டியது அனுவசியமாகும்.

சுப்பன் தன்னிடத்திலளிக்கப்பட்ட கடித உறையைப் பிரித்துப்பார்த்தபோது அதிலும் ஒரு வரைந்த கடிதமும், இரண்டு அரங்களும், ஒரு திரவம் நிறைந்த புட்டியும், கொஞ்சம் மெழுகும், கடிதம் பென்ஸிலும் இருந்தன. அவனும் தன் தந்தையைப்போல் மிக்க சந்தோஷமடைந்து அவற்றை யெல்லாம் பத்திரமாக வைத்துவிட்டு மாலே ஆகாரம் வருவதற்குள் தன் தந்தைக்கும் வீரப்பனுக்குமாக இரண்டு கடிதங்கள் எழுதிவைத்தான்.

ஏழுமலே, அன்று இராப்போஜனம் கொண்டுவந்தபோது, சுப்பன் கடிதத்தை யவன் தந்தையிடமும், தந்தை

யின் கடிதத்தைச் சுப்பனிடமும் அளித்துவிட்டு, அவ்விருவரும் வீரப்பனுக்கு வரைந்த கடிதங்களை யெடுத்துக்கொண்டு சென்றான். வீரப்பன் தினம் ஹோட்டலுக்கு வந்து நடந்த சங்கதிகளைக் கேட்டறிந்துகொண் டிருந்தான்.

ஏழுமலை மிகக் கொஞ்சமாய்ப் பேசுவதோடு சிறைச்சாலையில் அக்கள்ளர்களிருக்கும் பாகத்தில் காவலிருந்த ஆளுக்குப் பலகாரம் சாராயம் முதலியவைகளைக் கொண்டு போய்க் கொடுத்துக்கொண் டிருந்தான். அதனால் அக்காவலன் தன்வரையில் அவன் கொடுக்கும் சாராயத்தைக் குடித்துச் சிற்றுண்டி பலகாரங்களை யருந்திக்கொண்டு ஏழுமலையையே அக்கள்ளர்கள் இருவர்க்கும் ஆகாரம் கொண்டு போய் கொடுத்து விட்டுச் சாவியைப் பத்திரமாகக் கொண்டுவந்து தன் கையிலளிக்கும்படி கட்டளை யிட்டு விட்டுத் தான் தன்னிடத்திலேயே யுட்கார்ந்து கொண் டிருக்கத் தொடங்கினான். இதனால் கள்ளர்களுக்கு வெளியிலுள்ள தங்கள் நண்பனிடமிருந்து கடிதங்கள் வரவும் தாங்கள் அவனுக்குக் கடிதமனுப்பவும், தங்கள் இரகசிய ஆலோசனைக்கு அவசியமான கருவிகளை வரவழைத்துக் கொள்ளவும் பூரண அனுகூலம் ஏற்பட்டது.

இரண்டு மூன்று நாட்கள் விவகாரங்கள் இவ்வாறே நடந்துகொண் டிருந்தன. பிறகு ஒருநாள் சிறைச்சாலைக் காவலன் தினம் நடக்கும் வழக்கம்போல் அறைகளைச் சுத்தம் செய்யும் ஒரு மூதாட்டியை யழைத்துக்கொண்டு நாற்பதாவது அறையைத் திறந்து அந்த அறையைச் சுத்தம் செய்யும்படி யவளை யுள்ளே யனுப்பிவிட்டு அவன் வெளியில் உலவிக்கொண் டிருந்தான்.

உள்ளே யறையைச் சுத்தம் செய்யச்சென்ற மூதாட்டி உள்ளே சென்றதும் காவலன் வெளியிலேயே யிருப்பதை

யறிந்துகொண்டு அறையைச் சுத்தம் செய்யத்தொடங்கிக் கடைசியில் கதவின் பின்பக்க மூலையைச் சுத்தம் செய்யக் கதவை மூடினாள். ஆனால் அவ்வாறு மூடியதும் அவள் செய்த காரியம் பெரிய கள்ளனுக்கே மிக்க வியப்பையும் திகைப்பையும் உண்டாக்கிவிட்டது.

ஏனெனில் அம்மூதாட்டி கதவை மூடியவுடன் தன் தேகத்தைக் கதவிற்கு ஒரு முட்டுபோல் வைத்துக்கொண்டு பெரிய கள்ளனாகிய கேசவனை நோக்கி மூக்கின்மேல் விரலை வைத்துக்காட்டிப் பேசாமலிரு என்று சமிக்கை செய்து தன் மடியிலிருந்த ஒரு கடிதத்தை யெடுத்து அவனிட மளித்துப் பிறகு துரிதமாய்த் தன் உடைக்குள் இடுப்பில் சுற்றிக்கொண்டிருந்த ஒரு கயிற்றை யெடுத்து அவனிட மளித்தாள். அவன் சட்டென்று அதையும் கடிதத்தையும் தன் படுக்கையின் கீழ் மறைத்துவிட்டான்.

அவள் கொடுத்த கயிறு ஒரு பலமமான நூலேணி செய்யப் போதுமான கயிறு. பலம் பொருந்திய நாரினால் மணிபோல் திரிக்கப்பட்டது. அதன் பிறகு கிழவி அந்த அறையைச் சுத்தி செய்தபின் நாற்பத்தோராவது அறைக்குச் சென்றாள். அங்கு அவள் சென்றபோது காவலன் பாட்டுப் பாடிக்கொண்டே நாற்பதாவதறையைப் பூட்டிக்கொண்டு மறுபடி கிழவி மற்ற அறையிலிருந்து வருமட்டும் பாடிக்கொண்டு உலவிக்கொண்டே யிருந்தான்.

சின்னக் கள்ளனாகிய சுப்பனும் கிழவியின் நடக்கை யால் திடுக்கிட்டு விட்டானாயினும் வெளியிலுள்ள தங்கள் நண்பனின் செய்கை யென்று உணர்ந்து மௌனமாக விருந்தான். கிழவி யவனுக்கும் பேசாம லிருக்கும்படி சமிக்கை செய்து, அவனிடம் ஒரு கடிதத்தைமட்டு மளித் தாள்.

இப்போது அவர்களுக்கு ஏழுமலை யொருவன்மட்டு

மல்ல, இருவர் தூதாட்கள் கிடைத்தார்கள். இக்கிழவி ஹோட்டல்காரனுகிய இரங்கராவின் சுற்றத்தாள். சுமார் நான்கு வருடங்களுக்குமுன் அவள் ஒரு ஆதரவுமின்றி அவனிடம் வந்துவிட்டாள். அவன் சிறைச்சாலை யதிகாரி களிள் தயவால் அவளுக்குச் சிறைச்சாலையின் ஓர் பாகத் தைப் பெருக்கும் வேலை கிடைக்கும்படிச் செய்தான். அவள் மிக்க அற்பகுண முடையவள். இரங்கராவ் எப் படி எதைச் செய்யும்படிக் கூறுகிருனே அதை யப்படியே செய்பவள். அதனல் அவன் தூண்டுதலாலேயே அவள் இத்தகைய காரியங்களைச் செய்யத் துணிந்தாள் நாம் செய்வது நியாயமா அநியாயமா, நீதிக்குச் சம்மதமா அல்லவா, என்ற ஒன்றுமே யவளுக்குத் தெரியாது. இரங்க ராவ் பாங்கிக் கொள்ளையிலும் இன்னும் பல கொள்ளைகள் முதலிய விவகாரங்களிலும், கேசவனேடும் சுப்பனேடும் சம்பந்தப்பட்டிருப்பவன். ஆனல் கள்ளர்களுக்குள் இருக் கும் கூட்டுறவால் இச்சங்கதி இதுகாறும் வெளிவரவே யில்லை.

சாதாரணமாக ஹோட்டல்காரரில் பெரும்பாலார் கள்ளர்களுக்கும் வழிபறிக் கொள்ளைக்காரருக்கும் உடந் தையாக விருப்பவர்களே. நாம் இப்படிக் கூறுவதில் எங்கும் எல்லா ஹோட்டல்காரர்களும் இப்படித்தானுக் கும் என்று கருதிக்கொள்ளலாகாது. இப்போது நாம் வரையும் இந்த நாவல் மேல் நாட்டு நாவல். இதில் மேல் நாட்டு ஆசாரங்களும் நடையுடைபாவனைகளுமே பெரும் பாலும் காணலாம். அவற்றில் அனேகம் ஆபாசங்க ளிருக்கின்றன. அப்படியிருக்க அவற்றையேன் நீர் எழுது கிறீர் என்ருல் அதற்குத் தக்க காரணம் இருக்கிறது. என்னவெனில் :—

இக்காலத்தில் நம் நாட்டாரில் பெரும்பாலர் மேல்

நாட்டு நாகரீகம் நடையுடைபாவனைகளை யதிகமாய் மெச்சி அவற்றைத் தாங்கள் பின்பற்றுவதன்றித் தங்கள் சந்ததி வழி வந்தோரையும் அத்திய வழியில் பயிற்றுகிறார்கள். இத்தகையோர் மேல்நாட்டு நாகரீக வெளிப்பகட்டில் மயங்கி பிரமை கொண்டு தாம் சாக மருந்துண்போர்க்குச் சமானமாவோர்களே. ஆதலின் மேல்நாட்டு ஆசாரங்களையும் ஒழுக்கங்களையும், அவர்களது நாகரீகமென்று மயக்கத்தால் கருதப்படும் ஆபாசங்களையும் வெளியிட்டு, அவற்றாலுண்டாகும் தீமைகளை நன்றாக வெளிப்படுத்தி அத்தகைய ஆசாரங்களைக் கண்டித்து நம்மவர்க்கு அறிவுறுத்தவேண்டுமென்பதே நமது கருத்து. நாம்வரையும் ஒவ்வொரு நாவலும் இந்த உண்மையை ஆதித்தனொளிபோல் நன்கு வெளிப்படுத்தும்.

ஆனால் சூரியன் தன் எண்ணிறந்த கிரணங்களை வீசிச் சகச்சோதியாய்ப் பிரகாசித்தாலும் சூரியனும் இருட்டாகத் தானிருக்கிறதென்று கூறத் தக்க குருடனும் உலகிலிருக்கிறானன்றோ. ஏனெனில் குருடனுக்குச் சூரியனொளி எப்படித்தெரியும்? அவனுக்கு யாவும் இருட்டே. அதுபோல் நமது நாவல்களை வாசித்து நாம் என்ன நோக்கத்தோடு அவற்றை வரைகின்றோம் என்றுணர அறிவினாற்றற் போதாத ஒருவர், "ஆரணி குப்புசாமி முதலியார் நாவல்களை யெழுதித் தென்னாட்டு மாதர்களை யடியோடு கெடுத்துவிட்டார்......" என்று மனங்கூசாது வாய்கூசாது ஒரு சஞ்சிகையில் வரைந்திருக்கிறார். ஆனால் அவர் வேறு ஒரு விஷயத்தைப்பற்றிய துவேஷபுத்தியால் அவ்வாறு வரைந்தாரேயன்றி, மற்றபடி அவரது மனச்சாட்சியே அது தவறென்று அவருக்குக் கூறாமற் போகாது.

ஆகையால் நாம் ஹோட்டல்கள் என்று இச்சந்தர்ப்பத்தில் கூறியது மேல்நாட்டு ஹோட்டல்களையே யாகும்.

அங்குக் கள்ளர்கள் ஹோட்டல்களில் அதிகமாகப் புழங்குவார்கள். தமது ஹோட்டலுக்கு வருபவர்களில் இன்னவனின்னவன் கள்ளன், இன்னவன் பெரிய கொள்ளைக்காரன், பேர்போன வழிப்பறி கொள்ளைக்காரன் என்பது முதலிய விஷயங்களனைத்தும் ஹோட்டல் முதலாளிக்கு நன்ருகத் தெரியும். ஆயினும் அவன் அவற்றை யொருபோதும் வெளியிடமாட்டான்.

ஏனெனில் முதலாவது அவர்கள் ஹோட்டலில் வந்து மிக்க தாராளமாகப் பணத்தைச் செலவு செய்வார்கள். ஹோட்டல்காரன் கிரையப்பட்டியில் ஒரு அணு பெறுமான வஸ்துவுக்கு இரண்டணு போட்டிருந்தாலும் பேசாமல் கொடுத்து விடுவார்கள். ஏனெனில "பகலிலும் இரவிலும் அகாலத்தில் வந்தாலும் அவன் தங்களுக்கு இடமும் உணவு முதலியவையும் மற்ற சௌகரியங்களும் அளிப்பான்" என்பது கள்ளர் நோக்கம்.

ஹோட்டல்காரனே தன் வரையில் மிக்க ஜாக்கிரதையாகவே நடந்துகொள்வான். தன் ஹோட்டலில் வந்திருப்பவன் பிரசித்தி பெற்ற கள்ளன் என்றும் இப்போது தான் வர்த்தகனென்று மாறு பெயர் கூறுகிருனென்றும் அறிந்திருந்தாலும் ஒன்றுமறியாதவன் போலவே நடிப்பான். போலீஸாருக்கும் அவர்களைக் காட்டிக்கொடான். ஏனெனில் அப்படி யொருகள்ளனைக் காட்டிக் கொடுத்தால் அக்கள்ளனுவது அவனைச் சேர்ந்தவர்களில் யாராவது தன்மேல் பயங்கரமான வஞ்சம் தீர்த்துக்கொள்வார்கள் என்று ஹோட்டல்காரன் நன்கறிவான். ஒவ்வொரு ஹோட்டல்காரர் கள்ளருக்கு உளவாகவிருந்து கொண்டு தங்கள் ஹோட்டலுக்கு வரும் பிரயாணிகளில் யாரிடமேனும் அதிக பொருள் இருப்பதாகத் தெரிந்தால் அவர்கள் எந்த வேளையில் எந்த திக்கை நோக்கிச் செல்லப்

போகிறார்களோ அதைக் கள்ளருக்கு அறிவித்துக்கொள் ளைப் பொருளில் பங்கு பெற்றுக் கொள்வார்கள். மேலே கூறப்பட்ட தஞ்சாவூர் ஹோட்டல்காரனாகிய இரங்கராவ் இத்தகையோனே.

---

## 26—வது அத்தியாயம்.

சிறையிலிருக்கும் இரண்டு கள்ளர்க்கும் வெளியி லுள்ள தங்கள் சிநேசிதர்களின் உதவி ஏற்பட்டு விடவே மிக்க சந்தோஷமும் தைரியமுமுண்டாகின. வீரப்பன் அவர்களுக்குக் கொஞ்சம் பணமுமனுப்பினான். கொஞ்சநாள் சென்றால் தங்களை வேறு சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் விடுவார்கள் என்று அவர்களுக்குத் தெரியு மாதலால் உடனே தங்கள் ஆலோசனைப்படி வேலை செய் யத் தொடங்கினார்கள்.

இவர்கள் இருக்கும் அறைகளின் பின்பக்கம் சாள ரங்களுண்டு. அவற்றில் இரும்புக் கம்பிகள் நாட்டப்பட் டிருக்கின்றன. சாளரங்கள் பின்பக்கமிருக்கும் நீண்ட விசாலமான முற்றத்தைப் பார்த்ததுபோ லிருக்கின்றன. அம்முற்றத்தில் கைதிகள் முறைப்படி உலவுவதற்கு விடப் படுவார்கள். அம்முற்றத்தின் மறுபக்கம் பெரிய மதில் சுவர் இருக்கிறது. அம்மதில் ஓரத்தில் ஒரு சிறு அறை வீடிருக்கிறது. அங்கு ஒரு பாராகாரன் எப்போது மிருப்பான்.

ஒருநாள் மாலை ஐந்துமணியிருக்கும். அச்சமயம் சிறைச்சாலையிலுள்ள அறைகளையெல்லாம் சுத்தம் செய் யும் மூதாட்டி வந்து 41-வது அறையைச் சுத்தம்செய்து கொண்டிருக்கிறாள். காவலன் வாயிற்படியில் நின்று கொண்டிருக்கிறான். சுப்பன் அவனை நோக்கிச் சமிக்கை

யாய்த் தன்னருகில் அழைத்தான். காவலன் அவன் அருகிற் சென்று என்ன சங்கதி யென்றான்.

சுப்பன் "நண்பனே! ஆம், நீ எங்கள்மேல் காவல் காத்தாலும் நான் உன்னை நண்பனெனவே கருதுகிறேன். ஏனெனில் நீ ஜீவனத்திற்கு இந்தத்தொழிலைச் செய்கிறாயே யன்றி எங்கள்மேல் விரோதங்கொண்டு எங்களை வெளியிற் செல்லாதபடி அடைத்து வைத்துக்கொண்டு காவல்புரியவில்லை. இதற்காக உன்மேல் நாங்கள் வெறுப்புக்கொள்ள எள்ளளவு காரணமுமில்லை. நீ யுனக்கு உப்பளிப்பவர்களுக்குத் துரோகம் செய்யலாகாது......" என்பதற்குள் காவலன் "நீ இவ்வளவு பெருந் தன்மையாகக் கூறுவதற்காக நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். நீ கூறுவது உண்மையே. இத்தகைய நல்ல உதாரகுணமுள்ள நீங்கள் அநீதமாகவே தண்டனை யடைந்திருக்க வேண்டும் என்றே கருதுகிறேன்" என்றான்.

சுப்பன் "அந்தோ! அந்த அக்கிரமத்தை யேன் கேட்கிறாய்? என் தந்தை போலீஸ் அதிகாரிக்குக் கொடுத்திருந்த ஆயிரம் ரூபா கடன் தொகையைக் கண்டித்துக் கேட்கப்போய் இந்த அபாண்டமான களவுக் குற்றம் எங்கள்மேல் சுமத்தப்பட்டுத் தண்டனையும் அடைந்து விட்டோம். அதிகாரிக்குப் பயந்து எங்களுக்குச் சாக்ஷிகூற ஒருவரும் வரப் பிரியப்படவில்லை. ஊரிலுள்ள எல்லார்க்கும் நாங்கள் நிரபராதிகளென்று நன்றாகத் தெரியும். ஆனால் அவர்கள் என்ன செய்யலாகும். நாங்கள் சிறை செய்யப்பட்டதைக் கேட்டதே சிறியோர் பெரியோர் அனைவர்களும் மனங்கலங்கிக் கண்ணீர்விட்டு எங்களுக்குத் தேறுதல்கூறி போலீஸ் அதிகாரியைச் சபித்தார்களே யன்றி வேறொன்றும் செய்யவில்லை. அவர்களுக் கென்னமோ மிக்க ஆத்திரமே. என் தந்தைமட்டும் அவர்களைச்

சாந்தப்படுத்தித் தடுக்காம லிருந்துவிட் டிருந்தால் அச் சமயம் அனர்த்தமே விளைந்திருக்கும்.'' என்றான்.

காவலன்:—"உங்களுக்கு என்னால் கூடிய உதவி யெது வாயினும் செய்வேன்'' என்றான்.

சுப்பன்:—"நான், நீ யுன் கடமைக்கு விரோதமாய் நடக்கத் தக்க காரியத்தை யொருபோதும் கூறமாட்டேன். சிறைச்சாலைக் கதவைத் திறந்துவிடுகிறேன் நீங்கள் ஓடிவிடுங்கள் என்று கூறினால் நாங்கள் அதற்குச் சம்மதிக்க மாட்டோம். நிரபராதிகளுக்கு எப்போ தும் ஆண்டவன் துணையிருப்பான். ஒரு விஷயம் அதாவது, நாங்கள் மிக்க செல்வவந்தரல்ல ரெனி னும் சற்று நாணயமாகவும் நிம்மதியாகவுமே வாழ்ந்து வந்தோம். இப்போது எங்களுக்கு நாங்கள் வழக்க மாய் அனுபவித்து வந்த சௌகரியங்கள் இங்கே கிடைக்கவில்லை. ஆகையால் உன் மூலமாய் இரண் டொரு முக்கியமான வஸ்துக்களைத் தருவித்துக் கொள்ளலா மென்பது என் கருத்து. உனக்குப் பிரியமிருந்து அந்த அல்ப உதவியைச் செய்தால் நாங்கள் ஒருபோதும் அந்நன்றியை மறக்கமாட் டோம்'' என்றான்.

காவலன் "இவர்களிடம் பண மிருக்கிறது. நமக்கும் கிடைக்கும்'' என்று உணர்ந்துகொண்டு "நீ யொன்றுக் கும் கிலேசப்பட வேண்டாம். உங்களுக்கு என்ன வேண்டுமோ கூறுங்கள். நான் இரகசியமாய்க் கட்டாயம் வாங்கிவந்தளிக்கிறேன்'' என்றான். சுப்பன் அச்சமயம் அவனிடம் ஒரு சவரனை யளித்து "ஒரு புட்டி பிராந்தியும் இரண்டு கிச்சிலிப்பழங்களும் வாங்கிக்கொண்டு வந்தால் மிக்க புண்ணியமாகும்'' என்றான்.

காவலன், "ஆகா அப்படியே வாங்கிவருகிறேன்'' என்று

கூறிவிட்டுச் சென்முன். சுப்பன் அவன் வாங்கிவந்த சாரா யத்தில் தான் குடித்து அவனுக்கு மளித்து மீதியை யவன் மூலமாகவே தன் தந்தைக்கு மனுப்பினுன். அதுமுதல் இத்தகைய விஷயங்களில் அக்காவலனும் இவர்களுக்கு அனுகூலமாய் விட்டான். அதுமுதல் சுப்பன் தினம் அவ னிடம் மிக்க அன்புடையவன்போல் பேசிச் சிறைச்சாலை யில் நடக்கும் விஷயங்களில் தங்கள் நோக்கத்திற்கு எவ் வளவு சங்கதிகள் அறியவேண்டுமோ அவ்வளவும் நன்ருக அறிந்து கொண்டான்.

அவை யென்ன சங்கதிகளெனின், அச்சிறைச்சாலை யில் முன்னே ஒரு விசாலமான கூடமிருக்கிறது. அங்கு மூன்று அறைகளிருக்கின்றன. ஒரு அறை சிறைச்சாலை யதிகாரியின் இரகசிய அறை. இரண்டாவதறை அவ ருடைய காரியாலயம். அங்கு இரண்டு மூன்று இலிகிதர் கள் தினம் பகற்காலத்தில் வந்து வேலை செய்துவிட்டு மாலை நான்கு மணிக்குமேல் போய்விடுவார்கள். அந்தக் கூடத்திற்கு முன்னுள்ள விசாலமான முற்றத்தில் ஒரு சிறு மாடிவீடிருக்கிறது. அதுதான் சிறைச்சாலை யதிகாரி யின் வாசஸ்தலம். அவருக்கு இப்போதிருப்பது இரண் டாவது மனைவி. அவளுக்கு ஒரேயொரு புத்திரன்ருன் இருக்கிருன். அவருடைய முதல் மனைவிக்கு இரண்டு பெண்களும் ஒரு பிள்ளையும் இருக்கிருர்கள். இரண்டாம் மனைவி அவர்களை யன்போடாதரிப்பதே யில்லை. அதனுல் தந்தைக்கு மிக்க மன வியாகுலம். அவர் சிறைச்சாலையில் தன் வேலையைக் கவனித்துக்கொண் டிருக்கும்போதும் அவர் மனம் "அந்தோ! நமது மக்களை யச்சண்டாளி என்ன பாடுபடுத்துகிருளோ" என்பதையே கலக்கத் தோடு சிந்தித்துக்கொண் டிருக்கும். அடிக்கடி வீட்டிற் குச் சென்று தமது முதல் மனைவியின் மக்களைக் கவனிப்

பதிலேயே யவருக்கு விருப்பம். இக்காரணத்தால் தமது வேலையைப் பெரும்பாலும் தம்மிடமிருக்கும் காவலர் வசத்திலேயே விட்டுவிடுவார்.

இச்சங்கதிகளை யெல்லாம் சுப்பன் அக்காவலனிடம் சினேகபாவமாகப் பேசியே யறிந்துகொண்டான். அந்த முன் கூடத்திலிருந்து ஒரு நீண்ட சுரங்கம் போன்ற வழி பின்னுள்ள ஒரு முற்றத்திற்குச் செல்கிறது. அம்முற்றத்தின் மூன்று பக்கங்களிலும், ஒரு பக்கத்திற்கு எட்டு அறைகள் வீதம் இருபத்தி நான்கறைக ளிருக்கின்றன. ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு கைதியே வைக்கப்படுவது, இவையன்றி அற்பகுற்றம் செய்தவர்களை வைக்கும் வேறு முப்பதறைகள் சிறைச்சாலையின் முன்பக்கமுள்ள மதில் ஓரத்தி லிருக்கின்றன. இந்த உள் முற்றத்திலிருக்கும் அறைகளில் நமது கள்ளர் இருக்கும் இரண்டறைகளும் பின்பக்கமுள்ள முற்றத்தையும், அதன் ஓரத்திலுள்ள மதில் சுவரையும் பார்த்தாற்போ லிருக்கின்றனவென்று முன்னமே கூறினோம்.

அந்த முற்றத்தில் மதிலோரத்தில் உள்ள ஒரு சிறு குடிசையறையில் ஒரு காவல னிருக்கிறானென்றும் கூறினோம். அங்குப் பகலில் முற்பகல் ஒருவனும் பிற்பகல் ஒருவனும், இரவில் அப்படியே முற்பாதியிரவில் ஒருவனும் பிற்பாதி யொருவனுமாக இருவர் மாறிமாறிக் காவலிருப்பார்கள். சுப்பன் சினேகம் செய்துகொண்ட காவலன் எப்போதும் பிற்பகல் ஒருமணியி லிருந்து இரவு ஒன்பது மணிவரையில் காவல் இருக்க வேண்டியவன்.

சுப்பன் அவனிடம் தந்திரமாகப் பேசிக்கொண்டே "பாபம் உன்வேலை மிகக்கஷ்டமே. இரவு ஒன்பது மணிக்குமேல் வீட்டிற்குச் செல்லவேண்டும்" என்றான்.

காவலன்:—ஆம் ஒரு விஷயத்தில் கஷ்டமே. ஆயினும்

மணி ஒன்பதடித்து விட்டால் இங்கு இப்பாகத்தி லுள்ள சிறையாளர் இருக்கும் அறைகளை மட்டுமே திறந்து உள்ளே யவர்கள் போசனம் செய்தபின் பேசாமற் படுத்துக்கொண் டிருக்கிறார்களா வென்று பார்த்துக் கொண்டு கதவைமூடிப் பூட்டிக்கொண்டு நான் நேராக வீட்டிற்குச் செல்ல வேண்டியதே.

சுப்பன் இம்மொழிகளைக் கேட்ட பின் பக்குவமாகச் சில சங்கதிகளை யறியும் வண்ணம் தந்திரமாகப் பேசத் தொடங்கி,

"அது சரிதான். ஆயினும் நீ சுலபமாய் விஷயத்தைக் கூறிவிட்டாய். ஆனால் பாபம் உனக்கும் கஷ்டமிருக்கிறது. ஏனெனில், அறைகளைப் பார்த்தபின் கதவுகளை மூடிப் பூட்டிக்கொண்டு சிறைச்சாலை யதிகாரி யிடம் சென்று யாவும் திருப்திகரமாகவே யிருக்கின்றன வென்று கூறிவிட்டு அததற்குவேண்டிய பத்திரங்களில் கையொப்பமிட்டு விட்டுப் பிறகுதான் நீ செல்லவேண்டும். உன்வேலை முடிந்து விட்டாலும் அதிகாரிக்கு வேறுவேலை யிருந்தால் அவர் அதை முடித்துக் கொண்டு உன்வேலையைக் கவனிக்கு மட்டும் காத்திருந்து, அவர் அதைக் கவனித்து, 'சரி; நீ செல்லலாம்' என்றபிறகே நீ செல்லவேண்டும்." என்றான்:

காவலன்:—"நண்பனே! நீ கூறுவது உண்மையே கொஞ்ச காலத்திற்கு முன் வரையில் நீ கூறிய மாதிரி தான் விவகாரங்கள் நடந்துகொண்டிருந்தன. ஆனால் இப்போதிருக்கும் சிறைச்சாலை யதிகாரி வந்தபின்—நான் முன் அவருடைய குடும்ப விஷயங்களைப்பற்றிய எல்லாச் சங்கதிகளையும் உன்னிடம் கூறினேனே— இங்கு சிறைச்சாலை நடவடிக்கைகளெல்லாம் மாறி

விட்டன. என் வரையில நான் பகல் வந்தது முதல் என் வேலைகளைச் சரியாய்க் கவனித்துக்கொண் டிருப்பேன். இரவு ஒன்பது அடிக்கப் பத்து நிமிடங்கள் இருக்கும்போது என் வசத்திலிருக்கிற அறைகளைத் திறந்து அவற்றிலுள்ள சிறையாளர்கள் பேசாமல் சயனித்துக்கொண் டிருக்கிறார்களா அல்லது சந்தேகமான விவகாரம் ஏதேனும் நடைபெறுகிறதா என்று கவனித்து, யாவும் திருப்தியாக விருந்தால் உடனே கதவுகளைப் பூட்டிக்கொண்டு சாவியைக்கொண்டு போய் மாட்டி விட்டுப் பேசாமல் வீட்டிற்குச் செல்ல வேண்டியதே'' என்றான்.

சுப்பன் மிக்க வியப்படைந்தவன்போல் “என்ன? சாவியை மாட்டிவிட்டுப் பேசாமற் போய்விடுவதா? மேலதிகாரியிடம் ஒன்றுமே கூறுமலா?'' என்றான்.

காவலன்:—“இந்த மேல் அதிகாரி அச்சமயம் தம் வீட்டில் குடும்ப விவகாரங்களில் பெருங் குழப்பத்திலிருப்பார். இதற்கு முன் அதிகாரியிடம் சென்று யாவும் திருப்தியாகவே யிருக்கின்றனவென்று கூறி, இன்னும் அவர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் விடையளித்து அவரைத் திருப்திசெய்து விட்டே செல்லவேண்டும். ஆனால் இப்புண்ணியவான் வந்த பின் அத்தகைய கஷ்டம் ஒன்றுமேயில்லை. அவரவர்கள் வேலை முடிந்ததும் அவரவர்கள் பேசாமல் போகலாம். என் வரையில் நான் கூறியபடி என் பாகத்திலுள்ள சிறையாளர் இராப்போஜனம் செய்தபின் அவரவர்களிடத்தில் பத்திரமாகவே படுத்திருக்கிறார்களென்றறிந்த பின், அறைகளைப் பூட்டிக் கொண்டு நேரே சென்று என் வசத்திலுள்ள சாவிக்

கொத்தை மாட்டிவிட்டு வெளியில் செல்ல வேண்டியதே'' என்ருன்.

சுப்பன் "அப்படியாயின் தொந்தரையில்லை. சாவியை எங்கேனும் மாட்டிவிட வேண்டியதே. பிறகு பேசாமற் போகவேண்டியதே. இவ்வளவு தானே?'' என்ருன்.

காவலன் "அல்ல அல்ல. சாவியை யெங்கேனும் மாட்டிவிடுவதோ? அப்படியல்ல. முன் கூடத்தில் வலது புறச் சுவரில் வரிசையாய் ஆணிகளடித்து, ஒவ்வொரு ஆணியிலும் எண் குறித்த தகரப்பில்லைகள் தொங்கவிடப் பட்டிருப்பதைப் பார்த்தாயல்லவா?'' என்றதே,

சுப்பன், "ஆம் ஆம் கவனித்தேன்'' என்ருன். காவலன் "அந்த ஆணிகளில் நான்காவது எண்ணுள்ள ஆணியில் நான் என் சாவிக்கொத்தை மாட்டிவிட வேண்டும். பிறகு நேராய் வெளியிற் செல்லவேண்டியது'' என்ருன்.

**சுப்பன்:**—அப்போதும் வெளிவாயிற் படியிலுள்ள காவலனுக்குக் குறிப்புவார்த்தை கூறிவிட்டுத்தானே செல்ல வேண்டும்?

**காவலன்:**-"இங்கு மிக்க முக்கியமான, அதாவது இராஜாங்க சம்பந்தமான, கைதிகள் சிறைச்சாலையில் வந்திருந்தால் மட்டுமே குறிப்பு வார்த்தை யுபயோகிக்கப்படும். மற்ற படி சாதாரணக் கைதிகள் எத்தகையோர் வந்திருந்தாலும் குறிப்பு வார்த்தை உபயோகப்படுத்துவ தில்லை. அதிலும் என் விஷயத்தில் நான் அந்த வேளையில் வெளியில் செல்கிறவனென்று வெளிவாயில் காவல்காரன் எவனுகை விருந்தாலும் அவனுக்குத் தெரியும். மேலும் இப்போது குளிர் காலமானதால் நான் என் ஊதாப் போர்வையைத் தேக முழுமைக்கும் போர்த்திச்செல்வது அவர்களுக்குத் தெரியும். நான் செல்லும்போதுதான் வெளி

வாயிலில் பாரா மாற்றிக்கொண் டிருப்பார்கள். ஆகையால் என் போர்வையைக் குறிப்பாய்க் கண்டதே அவர்கள் அதற்குமேல் கவனிக்க மாட்டார்கள். இவ்வளவென்ன வேறு யாரேனும் என் போர்வையை யணிந்து சென்றாலும் அவர்கள் யாரென்று கேட்கவே மாட்டார்கள்" என்றான்.

சுப்பன்:—"அது எப்படியாயினும் ஒழியட்டும். ஒன்பதுக்கு மேலாவது நீ நிம்மதியாய் வீடுபோய்ச் சேருகிறாய். அவ்வளவே எனக்குச் சந்தோஷம்" என்றான்.

ஆனால் உண்மையில் தான் இத்தகைய விஷயங்களையெல்லாம் அறிந்து கொண்டது அவனுக்கு மிக்க சந்தோஷம். கடைசியில் "போர்வை யணிந்து கொண்டு செல்வதாய்க் கூறினையே, எங்கே அதைக் காணோமே?" என்றான். காவலன் "போர்வை யிரவிற் செல்லும்போது மட்டுமே வேண்டும். ஆகையால் நான் உட்காரும் அறையின் மேஜையில் அதை வைத்திருக்கிறேன். இரவு செல்லும் போது எடுத்து போர்த்துக் கொண்டு செல்வேன். அப்படியே யெப்போதும் வழக்கமாய்விட்டது. இனி நேரமாய் விட்டது, நான் போய்வருகிறேன்" என்று கூறிவிட்டு அறையைப் பூட்டிக்கொண்டு சென்றான்.

அவன் சென்றபின் சுப்பன் சற்றுநேரம் ஆலோசனையி லிருந்தான். அதன்பின் தன்னிடமிருக்கும் காகிதம் பென்ஸில் முதலிய எழுதுகருவிகளை யெடுத்துத் தன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதி, இந்த இரவு எழுமலை தனக்குப் போசனம் கொண்டு வந்தபோது அவனிடம் அக்கடிதத்தைக் கொடுத்துத் தன் தந்தையிட மனுப்பினான். அவன் அக்கடிதத்தில் தன் ஆலோசனையை யெழுதியிருந்தான். அது என்ன வென்பது முதலிய விஷயங்கள் பின்

னால் இவர்களுடைய நடக்கைகளால் வெளிவருமாதலால் அதனை நாம் ஈண்டுக் கூறவேண்டியது அனுவசியமாகும்.

எந்தெந்தச் சமயத்தில் தங்கள் அறைகள் திறக்கப் பட்டுக் காவலர் முதலியவர்கள் உள்ளே வருவார்களென்பதும், வெளியில் எங்கெங்குக் காவலாட்க ளிருக்கிறார்களென்பதும் கள்ளர்களுக்கு நன்றாகத்தெரியும். நாம் கூறியபடி சுப்பன் தன் தந்தைக்கு மேற்கண்ட கடிதத்தை வரைந்ததினம் அவர்கள் அங்கு அடைக்கப்பட்ட பத்தாவது தினம். இன்னும் ஐந்து திளங்களே யவர்கள் அங் கிருப்பார்கள். அதற்குமேல் அவர்கள் வேறு சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்படுவார்கள். அதுவும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் அன்று முதல் தங்கள் ஆலோசனைப்படி வேலைசெய்யத் தொடங்கினார்கள்.

---

## 27—வது அத்தியாயம்.

வீரப்பன், கேசவன் அதாவது பெரிய கள்ளனுக்குத் தன் மகன் ஏழுமலை மூலமாய் அனுப்பிய கடித உறையில் இரண்டு அரங்களும், ஒரு திராவகம் நிறைந்த புட்டியும், ஒருவிதக் கறுப்பு மெழுகும் இருந்தனவென்று கூறியிருந்தோம். அத்திராவகம் எத்தகைய கடினமான இரும்பையும் மிருதுவாக்கக்கூடியது. அதனால் சாளரக் கம்பிகளை அறுக்கவேண்டிய இடத்தில் மிருதுவாக்கினால் சுலபமாக அறுத்து விடலாம். பிறகு சிறைச்சாலைக் காவலர்கள் கம்பிக ளறுக்கப்பட்டதை யறியாம லிருப்பதற்காக கறுப்பு மெழுக்கை அறுத்த வாயில் பூசி யடைத்து விட்டால் அறுத்த சங்கதியே பார்வைக்குத் தோன்றாது. அதற்காகவே மெழுக்கு அனுப்பப்பட்டது.

இரும்பை யரத்தால் அறுத்தால் வெளியில் எப்படியும்

சத்தம் கேட்கும். கள்ளர் இருக்கும் சாளரத்தின் அறை பின்பக்கம் முற்றத்தைப் பார்த்தது போன்றிருக்கிறது. அந்தமுற்றத்தில் எந்நேரமும் ஒரு காவலனிருக்கிறான். இரவில் மாலை ஆறுமணி முதல் நடு இரவு பனிரண்டுமணி வரையில் ஒருவனும், அதற்குமேல் காலை ஆறுமணி வரையில் ஒருவனுமாக மாற்றிக் காவலிருப்பது வழக்கம். பகற்காலத்தில் கள்ளர் வேலை செய்ய முடியவே முடியாது. இரவிலும் மிக்க கஷ்ட மிருக்கிறது. எப்படியெனின் பின்னுள்ள முற்றத்தில் காவலிருப்போன் அம்முற்றத்தின் ஒரு மூலையிலிருந்து மறுமூலைவரையில் திரிந்துகொண்டேயிருப்பான். நாற்பதாவது எண்ணுள்ள அறையும் நாற்பத்தோராவது எண்ணுள்ள அறையும் முற்றத்தின் மையத்திலிருக்கின்றன.

ஆகையால் காவலன் அந்த அறைகளின் அருகில் வந்து அவற்றைக் கடந்து சென்றபின்பே இவர்கள் கம்பியை யறுக்கத் தொடங்கவேண்டும். காவலன் மறுகோடிக்குச் சென்று அவன் திரும்பி வரும் காலடிச் சத்தத்தால் தங்கள் அறையை நெருங்குகிறான் என்று தோன்றும்போது வேலையை நிறுத்திவிடவேண்டும். இதனால் அவர்கள் வேலை ஆலசியமாகவே நடைபெறுவதாயிருந்தது.

பெரிய கள்ளன் மட்டுமே அவ்வேலையைச் செய்யத் தொடங்கினான். காவலன் இரவு போசனம் கொண்டு வந்து கொடுக்கும்போது சுமார் ஏழுமணியாகிறது. போஜனம் முடிந்ததும் கூடத் தன் வேலையைத் தொடங்கமுடியாது. ஏனெனில் எட்டுமணிக்குக் கடைசியாகச் சோதனைசெய்ய ஒரு சிறைச்சாலை யுத்தியோகஸ்தன் வருவான். அவன் வந்து கைதிகளிருக்கும் அறைகளில் சந்தேகத்திற்கு இடந்தரத்தக்க விவகாரங்கள் ஒன்றும் நடைபெறவில்லையென்று தெரிந்துகொண்டு சென்ற பின்பே கைதிகள் செல்லவேண்

டும். பிறகு காலை ஏழு மணி வரையில் ஒருவரும் அங்கு வரமாட்டார்கள்.

இக்காரணங்களால் எட்டு மணிக்கு ஒருவன் வந்து சோதனை செய்துகொண்டு சென்றபின்பே நமது கேசவனுடைய வேலை தொடங்கவேண்டும். அவன் மட்டுமே சாளரத்தின் வழியாகத் தப்பித்துக்கொள்வதென்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். சின்னவனாகிய சுப்பன், ஏக காலத்தில் இருவரும் சாளரக்கம்பிகளை யறுக்கத் தொடங்கினால் ஒரு சமயம் எப்படியேனும் கொஞ்சமாவது சந்தடி கீழே பாராவிருக்கும் காவலன் செவிகளில் விழலாகும். அவனுக்குக் கொஞ்சம் சந்தேகமுண்டாய் விட்டால் அவன் உடனே சிறைச்சாலை யதிகாரியிடம் சென்று கூறி விடுவான். உடனே பூரணமாக மிக்க சாக்கிரதையான சோதனை செய்யப்படும். அதனால் எல்லா உண்மையும் கட்டாயம் கண்டு பிடிக்கப்படுவது நிச்சயம் என்று யாவரும் உணர்வார்கள். ஆகையால் சுப்பன் தன் வரையில் வேறு விதமான தந்திரத்தால் சிறைச்சாலையி லிருந்து வெளிப்படுவதென்றும், பிறகு தன் தந்தை வெளியில் வருவதற்கு வீரப்பன் முதலியவர்களோடு தானும் சேர்ந்து உதவி புரிவதென்றும் தனக்குள் மிக்க தந்திரமும் துணிகரமுமான ஒரு ஆலோசனை செய்துகொண்டு அதைத் தன் தந்தைக்கு அறிவித்தான். தந்தை யதை மெச்சிக்கொண்டு தன் கூட்டாளியாகிய வீரப்பனுக்கு அறிவிக்க அவனும் தன் புத்திரனாகிய ஏழுமலையோடு ஆலோசனை செய்து அதுவே சரியான ஏற்பாடென்று தங்களுக்குள் ஒருமித்து ஒருவித தீரமானத்திற்கு வந்தார்கள். அதன்படியே யிப்போது விவகாரங்கள் நடக்கப் போகின்றன.

இக்கதையை வாசிக்கும் நண்பர்களாகிய சகோதரர், சகோதரிகள் அனைவர்க்கும் இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒரு

விஷயத்தைப்பற்றிக் கூற விரும்புகிறோம். அதாவது இது கள்ளர் விவகாரம், அயோக்கியர்கள் விவகாரம். இராஜ நீதிக்குமாறான விவகாரம், விவகாரத்தின் யோக்கியதை யைப்பற்றி நாம் இச்சமயத்தில் கவனிக்க வேண்டாம். அவர்களுடைய ஒற்றுமையான நடக்கையைப் பற்றிமட் டும் கவனிப்போம்.

வெளியிலுள்ள கள்ளர்களாகிய வீரப்பன் ஏழுமலை இருவரும் இப்போது எதைக் கவனித்தார்கள்? உண்மை யில் இந்த விஷயத்தில் பிரவேசிப்பதால் அவர்களுக்குப் பெரிய ஆபத்தே நேரிடக்கூடும். ஆனால் அவர்கள் அதை யுணரவில்லையா? ஒருகாலும் உணராதில்லை. அவர்க ளுக்கு அது நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் அவர் கள் ஏன் இத்தகைய ஆபத்தான காரியத்தில் தலையிட்டுக் கொள்ள வேண்டும்? தங்கள் நண்பனாகிய கேசவனையும் அவன் புத்திரனாகிய சுப்பனையும் இந்த ஆபத்தினின்றும் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரு எண்ணமே இக்காரியத் தைச் செய்யும்படி யவர்களைத் தூண்டியது. இதனால் அவர்கள் "நாம் நமது நண்பர்க்கு உதவிசெய்ய முயல்வ தால் நமக்கே கெடுதி யுண்டாகும்படி செய்து கொள்கி றோமே" என்பதைக் கவனிக்க வில்லை.

அதாவது தங்கள் சுயநலத்தைக் கருதாததோடு பெரிய தியாகத்தைச் செய்யத் துணிந்து விட்டார்கள். பிறர்க்கு நன்மைசெய்ய விரும்பும் எவனும் சுயநலத்தைக் கருதலாகாது. அதோடு தன்னாலான வரையில் தியாகம் செய்யக் கூடியவனே பொது நலமான காரியத்தைச் செய்யத்தகுந்த யோக்கியதை யுடையவனாவான். ஏனெ னில் சுயநலத்தியாக மின்றிப் பொது நலம் எப்போதும் நடை பெறுவதில்லை. இது உலகத்தில் பிரத்தியட்ச அனுபவம்.

இப்போது நமது பாரத பூமியாகிய தாய் நாட்டில் எத்தனையோபேர் நான் தாய் நாட்டிற்குத் தொண்டுசெய்யவே முன்வந்து பாடுபடுகிறேன் என்கிறார்கள். ஆனால் மேற்கண்ட கள்ள ரிருவருக்கும் இருக்கும் சுயநலத்தியாகம் கூட இவர்களில் பெரும்பாலர்க ளிடத்திலில்லை. இவர்கள் இத்தொழிலில் தங்களுக்குக் கௌரவமும் செல்வாக்கும் வருமானமும் கிடைக்குமென்ற நோக்கத்தோடேயே அப்பதவிகளை யடைய முயல்கிறார்களே யன்றி வேறில்லை. ஏனெனில் இவர்களுக்குத் தாய்நாட்டின்மேல் உண்மையான பக்தியில்லை; அன்பில்லை; அபிமானமில்லை. இத்தகையத் துரோகிகளை விட நமது வீரப்பனும், அவன்மகன் ஏழுமலையும் எவ்வளவோ உண்மையான சிநேக அபிமானிக ளென்று கூறச்சற்றும் தடையேயில்லை.

சகோதர சகோதரிகளே! உங்களில் சிலர் மனதைக் கவர்ந்து செல்லும் இந்த விவகாரம் ஏன் நடுவில் கூறப்பட வேண்டும் என்று வெறுப்படையலாகும். ஆனால் உண்மையில் கதைகள் நாவல்கள் இவற்றை வாசிப்பது எதற்காக? நல்ல விஷயங்களை யுணர்ந்து அதன்படி நடப்பதற்காகவேயன்றி வேறல்ல. அத்தகைய நோக்கத்தோடு எழுதப்படாத நாவல்கள் வாசிக்கத் தகுதியுடையவை யல்ல.

இப்பேது நாம் கதைத் தொடர்ச்சியினிடையில் விவரித்துக் கூறிய விஷயம் எதற்காகவெனில், பொது நலத்திற்குப் பாடுபடுகிறோம், நம் தாய் நாட்டின் க்ஷேமத்திற்கே இக்காரியத்தைச் செய்கிறோம் என்று கூறுகிறவர்கள், எவராயினும் சரி, சுயநலங் கருதாதவர்களாகவிருக்க வேண்டும் அதாவது, "நமக்குப் பட்டம், உயர் பதவி, செல்வம் கௌரவம் முதலிய எதுவும் வேண்டாம். இப்போது நாம் நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காகச்

செய்ய முயலும் காரியம் நிறைவேறவேண்டும். அதற்காகக் கூடும் இச்சபையில் நமக்கு எந்த ஊழியம் அளிக்கப்பட்டாலும் சரியே. நமக்கு இதில் கௌரவ பதவி வேண்டாம்" என்று பெருந்தன்மை வாய்ந்த குணசாலிகளாகவிருக்கவேண்டும். இன்றேல் அவர்களால் தாய் நாட்டிற்கு ஒரு பயனுமுண்டாகாது.

இனிக் கள்ளராயினும் தங்கள் சிநேகரைக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தால் தங்கள் சுயநலத்தைக் கருதாததோடு எத்தகைய ஆபத்திற்கும் துணிந்து, தம் நண்பர்க்கு உதவிசெய்யத் தொடங்கினர்கள். சுயநலத்தியாகம் செய்ய மனந்துணியாத எவனும் அன்னியர்க்கு எத்தகைய நலனையும் செய்யமுடியாது என்பது அனுபவம். நீ யொருவன் பசியைத் தனிக்க விரும்பின், நீ கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தில்கொஞ்சமேனும் தியாகம் செய்தே தீரவேண்டும்; ஒருவனுக்கு வழிகாட்டவேண்டுமாயினும் உன் வேலையை விட்டு விட்டுச் சற்று தூரம் செல்லவேண்டும். மேல்நாட்டாரிடம் ஒரு பொது நலத்தைச் செய்யக் கருதும்போது எத்தகைய அவசியமான தியாகத்தையும் செய்யும் குணமிருக்கிறது. அந்தோ! நமது நாட்டாரில் பெரும்பாலும் அக்குணமில்லை. மேலுக்குப் பொதுநலத்திற்கும் தாய் நாட்டிற்குப் பாடுபடவே பிரியப்படுபவர்கள்போல் அபிநயித்து அதற்குத் தக்க பதவியை யடைந்ததே அபமான சுயநலத்திலேயே நாட்டம் வைத்துப் பொதுநலத்திற்கும் தாய் நாட்டிற்கும் இடையூறுவேண்டுமாயினும் செய்து விடுவார்கள். தங்கள் வரையில் கௌரவப்பட்டம், செல்வாக்கு, செல்வம் முதலியவைகளைப் பெற்றால் போதும் என்பதே அவர்கள் எண்ணம். நம்மவர்கள் மேல் நாட்டாரிடமிருக்கும் மேற்கண்ட உயர்ந்த குணங்களைப் பின்

பற்றுவதைவிட்டு, அவர்கள் ஆசார ஒழுக்கங்களில் எவை நமக்கும் நம் தாய் நாட்டிற்கும் பெருந்தீங்கை விளைவிக்குமோ அவற்றையே பின்பற்றுகிறார்கள். இக்குணம் தேனை வடிகட்டும்போது மதுரமான தேனை வெளியே விட்டு விட்டு, செத்தை, மெழுக்கு, செத்த ஈ முதலிய அசுத்தங்களை மட்டும் பிடித்துக்கொள்ளும் பன்னாடையின் குணமேயாகும். இனி நமது கள்ளர்களின் நடக்கையைக் கூறுவாம்.

வீரப்பன் கேசவனுக்கு இரண்டு மூன்று நல்ல அரங்களையும் இரும்பைப் பதனுக்கும் திராவகத்தையும் ஒரு விதக் கறுப்புமெழுக்கையும் அனுப்பினனென்று கூறினோமல்லவா. இரவு எட்டுமணிக்குக் கடைசியாகக் காவலன் வந்து பார்த்து அறைகளை மூடிப் பூட்டிக்கொண்டு சென்றபின் பெரிய கள்ளன் மெதுவாய்ச் சாளரத்திலுள்ள இரும்புக் கம்பிகளை யொவ்வொன்றாய் அறுக்கத் தொடங்கினன். முற்றத்திலிருக்கும் பாராக்காரன் சாளரத்தை விட்டு எட்டச் சென்ற பின்னே யறுக்கத் தொடங்கவேண்டும். மறுபடி யவன் காலடிச்சத்தம் சாளரத்தை நெருங்கும்போது தன் வேலையை நிறுத்திவிட வேண்டும். பிறகு விடியற்காலமட்டும் வேலை செய்தபின் கம்பி அறுக்கப்பட்டிருக்கும் இடத்திலுள்ள அறுப்பு வாயில் கறுப்புமெழுக்கைப் பூசிவிடவேண்டும். அப்போது தான் பகலில்யார் பார்த்தாலும் சாளரக்கம்பிகள் அறுக்கப்பட்டிருக்கும் சங்கதி தெரியாது. இவ்வாறு நான்கு கம்பிகளை யொருபக்கம் அறுத்துவிட்டு அவற்றை மறுபக்கம் வளைத்துவிட்டால் ஒரு ஆள் சாதாரணமாய் அவ்வழியே நுழைந்து செல்லலாகும்.

ஆனல் வேலை மேல் கண்டபடி ஆலசியமாக நடப்பதாலும் இரும்புக் கம்பிகள் மிக்க உறுதியானவையான

தாலும் அவ்வேலை முடியக் குறைந்தது நான்கு நாட்களாவது செல்லும் என்று உத்தேசிக்கப்பட்டது. அவ்வாறே அவ்வேலையைத் தொடங்கிய ஐந்தாவது நாள் காலை ஐந்து மணிக்கு நான்கு கம்பிகளும் மேல் பக்கம் பூரணமாய் அறுக்கப்பட்டு முடிந்தது.

இதற்கிடையில் சுப்பன் அப்பாகத்திலிருக்கும் பாராக்காரனிடம் தினம் பணம் கொடுத்துச் சாராயம் சிற்றுண்டிகள் வாங்கி வரச் செய்வதும், அவற்றை யவனையும் கூட வைத்துக்கொண்டு அருந்துவதுமாய் அவனை மிக்க சினேகமாக்கிக்கொண்டான். ஒருநாள் இரவு எழுமணிக்கு இருவரும் சாராயமருந்திச் சிற்றுண்டி புண்டுகொண்டிருக்கையில் சுப்பன் காவலனை நோக்கி "ஆச்சு, இன்னும் இரண்டொரு நாட்களில் நாங்கள் வேறு சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்படுவோம். எங்களுக்கென்னமோ எல்லாச் சிறைச்சாலைகளும் ஒன்றுதான். ஆனால் காவலர்கள் எப்போதும் எங்குமே நல்லவர்களாக இருப்பதில்லை. இங்கு உன்னைக்கண்டதுமுதல் எனக்கு ஒரு நல்ல நண்பன் கிடைத்ததுபோ லிருக்கிறது. உன்னை விட்டுப் பிரிவதே என்வரையில் மிக்க மனவருத்தமாகவிருக்கிறது" என்றான்.

காவலன், "எனக்கும் உன்னைவிட்டுப் பிரிவது மிக்க துயரமேயாகும். என்னாலான உதவி யெதுவேனும் செய்ய நான் சித்தமாகவிருக்கிறேன்" என்றான்.

சுப்பன்:—"நீ செய்யத்தக்க உதவி யென்னவிருக்கிறது? நாங்கள் இங்கிருக்குமட்டும் இப்போது நீ செய்துகொண்டிருக்கும் இத்தகைய உதவியைத்தான் நான் உன்னைச் செய்யும்படிக் கேட்கலாம். இதற்குமேல் உனக்கு ஆபத்தை யளிக்கத்தக்க அத்தகைய உதவியைச் செய்யும்படி நான் ஒருபோதும் உன்னைக் கேட்கமாட்டேன். அப்படி நான் சிறைச்சலையைவிட்

டுத் தப்பித்துக்கொண்டு போகப் பிரியப்பட்டால், அத்தகைய அவசியம் நேர்ந்தால், அப்போதுங்கூட நான் உன்னை யுடந்தையா யிருக்கச்செய்து உனக்கு இக்கட்டையொருபோதும் உண்டாக்கமாட்டேன். அத்தகைய காரியத்தை நானே செய்துகொள் வேன். அப்படிப்பட்ட சமயம் இப்போதும் ஒன்று மில்லை. ஆனல் எனக்கு ஒரு பிரியம் இருக்கிறது. அதாவது நாங்கள் இதைவிட்டுப் போவதற்குள் இன்னொருமுறை நீயும் நானும் இம்மாதிரி சந்தோஷ மாய்ப் போஜனமருந்தவேண்டு மென்பதே" என்றான்.

அந்தோ! அக்காவலன் இக்கள்ளன் மொழிகளை யெல்லாம் உண்மை மொழிகளாகவே மதித்துக் கொண்டான். இவன் மிக்க பெருந்தன்மையான குணமுடைய வன். இவனும் இவன் தந்தையும் ஏதோ மிக்க தவருக இத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டனை யடைந் திருக்கிறார்கள். வேறு யாராயினு மிருந்தால் தாங்கள் சிறைச்சாலையி லிருந்து தப்பித்துக் கொண்டு போய்விட நம்மை யுளவாகவிருந்து உதவிசெய்யும்படி கேட்பார்கள். இவர்கள் அப்படிப்பட்டவர்க ளல்ல" என்று எண்ணிக் கொண்டான்.

அதனல் அக்காவலன் சுப்பனை நோக்கி "நண்பனே! ஆம் நான் உன்னை நண்பனுகவே கருதுகிறேன். நீ என்ன காரியம் செய்யச் சொன்னலும் சித்தமாய்ச் செய்யவிருக்கி றேன். என்னை என்றைக்கு உன்னேடு போசனம் செய்யக் கூறுகிருயோ, அன்று சந்தோஷமாய்ச் சாப்பிடவருகி றேன்" என்றான்.

மறு நாட்காலை எழுமலை போஜனம் கொண்டுவந்த போது சுப்பன் தான் ஆயத்தமாக எழுதிவைத்திருந்த

18652
சென்னை-600 008

ஒரு கடிதத்தை அவனிடமளித்து "இதை மிக்க இரகசியமாக உன்தந்தையிட மளிக்க வேண்டும்" என்று கூறினன்.

மறு நாள் மாலைப்போஜனம் கொண்டு வந்து கொடுத்த வழுமலை, தந்தைமகன் இருவர்க்கும் தன்தந்தையிடமிருந்து ஒவ்வொரு கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். சுப்பனிடம் கொடுத்த கடிதத்தில் ஒரு சிறு பொட்டணம் இருந்தது. அதை யவன் பெற்றதும் கடிதத்தை வாசித்துப் பார்த்து விட்டுத் திருப்தியடைந்த முகக்குறியோடு அப்பொட்டணத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில் ஒரு விதமான வெள்ளைச் சூரணம் சுண்ணம்போ லிருந்தது. அதைக் கண்டதும் சுப்பன்முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. அவன் அதைப் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

பெரிய கள்ளனுகிய கேசவன் தனக்குத் தன் நண்பனனுப்பிய கடிதத்தைப்பிரித்துப் பார்த்தான். அதில் பின்வருமாறு எழுதப்பட் டிருந்தது:—

"நண்பனே! நான் உனக்கு என்னுல் கூடியவரையில் எல்லா உதவியும் செய்யத் துணிந்திருக்கிறேன். இதுகாறும் நடக்கும் விவகாரங்கள் நமது எண்ணப்படி நடக்கும் பட்சத்தில் நமதுகருத்து நிறைவேறு மென்பதில் சற்றும் ஐயமில்லை உன்வரையில் நீ செய்யவேண்டிய காரியம் பூரணமாக நிறைவேறி விட்டதைப்பற்றி மிக்கசந்தோஷம். ஆயினும் எதற்கும் மிக்க ஜாக்கிரதையாகவே யிருப்பது நலம். நமது சுப்பனுடைய ஆலோசனையும் ஏற்பாடும் மிக்க நேர்த்தியானதே. அவன் அதின்படி ஜெயமடைவா னென்றே நான் பூரணமாய் நம்புகிறேன். நாட்கள் இன்னும் மூன்றே யிருக்கின்றன. இதற்குள் நமது காரியம் நிறைவேறவேண்டும். இன்றேல் இது

990 099

காரும் செய்த முயற்சிகளனைத்தும் வியர்த்தமாய் விடும். நான் மிக்க சாக்கிரதையாய்க் கவனித்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் உள்ளிருந்து உங்கள் காரியத்தைச் சரியாக முடித்துக்கொண்டால் நான் வெளியில் யாவும் ஆயத்தமாகத் தயார் செய்து வைத்துக் கொண்டிருக்கிறேன். இதைப்பற்றி யுங்களுக்குச் சற்றும் ஐயம் வேண்டாம். இனி வேளை மட்டும் சரியாக அமையவேண்டும். என் வரையில் நாளைமுதல் இரவு ஒரு மணிமுதல் பின் பக்க மதிற் சுவரோரம் தினம் சகல சௌகரியங்களோடும் ஆயத்தமாகக் காத்துக்கொண்டிருப்பேன். இது சத்தியம். மற்ற விஷயங்களுக்கு நீங்கள் சௌகரியப்படி நடந்து கொள்ளவேண்டும். இன்று முதல் எப்போதும் வெளியில் உதவி தயாராகவிருக்கிறது. நீங்கள் சௌகரியப்படி நடந்து கொள்ளவேண்டும். நீங்கள் ஆயத்தமானதே மதில் சுவரின் ஓரத்தில் வந்து ஒரு கல்லை வெளியில் எறியவேண்டியதே. அவ்வளவே, நூலேணி மதில் மேல் போடப்படும், மற்ற சங்கதி நான் கூறவேண்டுவதில்லை. மிக்க ஜாக்கிரதையாய் நடந்து கொள்ளுங்கள். நான் அதிகம் கூறவேண்டுவதில்லை'' என்று எழுதப்பட்டிருந்தது.

வீரப்பன் சுப்பனுக்கெழுதிய கடிதத்தில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

"நண்பனே! உன் ஆலோசனை மிக்க சிலாக்கியமானதே. இருவரும் ஒரே விதமாக வெளிவருவதாயின் விபரீதமான சந்தேகமேயுண்டாகும். உன் உத்தேசப்படி யாவும் நடைபெறுமென்றே பூரணமாக நம்புகிறேன். நீ யம்மாதிரி சிறைச்சாலையினின்றும் வெளிப்பட்டதே உங்கள் அறைகளின் பின்பக்கமிருக்கும் மதில் சுவரின்

எதிரில் ஒரு இடத்தில் ஒரு பெரிய அரசமரமிருக்கிறதல்லவா ; நீ நேராக அங்கு வந்து விட்டால் நமது ஆட்களைக் காணலாம். பிறகு நாம் உன் தந்தையை மதில் வழியாய் வெளியழைத்துக்கொள்ளலாம். எல்லாம் சுலபமாகவே முடிந்துவிடும்" என்று வரையப்பட்டிருந்தது.

---

## 28—வது அத்தியாயம்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த இரண்டாவது நாள் மாலை சுமார் ஆறுமணியிருக்கும். அச்சமயம் மேகம் கறுகறுத்து வானம் மிக்க பயங்கரமான நிலைமையிலிருந்தது. கொண்டல் கொண்டலாக கரியமேகங்கள் வானமெங்கும் நிறைந்து கவிந்து கொண்டிருந்தன. அடிக்கடி கண்களைக் கெடுக்கக்கூடிய விதமாக மின்னல் பளிச்சுப் பளிச்சென்று மின்னிக்கொண்டிருந்தது. வானத்தில் "ஆச்சு உங்களை யிதோடு அடியோடழித்துவிடுகிறேன்" என்று சத்த மேகங்களும் பயமுறுத்துவதுபோல் குமுறலும் தடதட கடகடவென்ற பயங்கரமான சத்தமும் உண்டாகிக்கொண்டிருந்தன. அச்சமயம் ஏழுமலை கள்ளர் இருவர்க்கும் போஜனம் கொண்டு வந்தான்.

அவன் முதலில் பெரிய கள்ளன் அறைக்குச் சென்றதும், அவனிடம் கண்களால் ஒருவிதச் சமிக்கைகாட்டி "அய்யா! பயங்கரமான மழைவரும்போலிருக்கிறது. ஆகையால் சீக்கிரம் போசனம் செய்துவிட்டுப் பாத்திரங்களைக் கொடுத்து விடுங்கள்" என்று கூறிக்கொண்டே அவனிடம் ஒரு சிறுகடிதத் துண்டை யளித்துவிட்டுச் சாப்பாட்டு மூட்டையை யங்குவைத்துவிட்டு, மற்றொரு மூட்டையை யெடுத்துக்கொண்டு சுப்பன் அறைக்குச் சென்றான்.

அவன் சென்றதே கேசவன் தன்னிடம் ஏழுமலை யளித்த கடிதத்தை வாசித்தான். அதில் எழுதியிருந்ததைக் கண்டதே யவனுக்குச் சந்தோஷ முண்டாயிற்று. அவன் துரிதமாகப் போசனம் செய்யத் தொடங்கினான். ஏழுமலை யவன் அறையை விட்டதும் சுப்பன் அறைக்குச் சென்று அவனிடமும் ஒரு சிறு துண்டுக் கடிதத்தைக் கொடுத்தான். "மழை கொடுமையா யடிக்கும்போ லிருக்கிறது, சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுப் பாத்திரத்தை யளித்துவிடு. நான் மழைக்குமுன் வீடுபோய்ச் சேரவேண்டும்" என்றான். அவ்வாறே யவன் அரைமணி நேரத்திற்குள் சிறைச் சாலையை விட்டுப் புறப்பட ஆயத்தமானான்.

அச்சமயம் சுப்பன் காவலனிடம் பணங்கொடுத்துச் சாராயமும் பலகாரமும் தருவித்தால் நாம் இருவரும் மழைக்கு நிம்மதியா யருந்தலாம் என்றான். காவலன் ஏழுமலையை யனுப்பி வேண்டியவற்றை வாங்கிவரச்சொன்னான். அவன் அவ்வாறே வாங்கிவந்து கொடுத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பினான்.

அன்றுமாலை எட்டுமணி யடிக்கும் சமயம் கடைசியாகக் காவலன்வந்து பெரியகள்ளன் இருக்கும் அறையைப்பார்த்து, அவன் நிம்மதியாய்ப் படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு கதவைமூடிப் பூட்டிக்கொண்டு நாற்பத்தோராவது அறைக்குச் சென்றான். சுப்பன் முன்னுடியே அவனைத் தன்னோடு சாராயங்குடிக்க வரும்படி யழைத்திருந்தபடியால் அவன் முன்னதாகவே வந்தான்.

தன் அறைக்குப் பக்கத்தறையில் காவலன் பிரவேசிப்பதை யறிந்தபோதே சுப்பன் அங்கு ஆயத்தமாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கண்ணுடிக் கிண்ணங்களில் ஒன்றை யெடுத்து, வீரப்பன் தனக்கு

அனுப்பியிருந்த வெள்ளைச் சூரணமாகிய மருந்தில் ஒரு சிட்டிக்கை யெடுத்து அக்கிண்ணத்தில் போட்டு ஒருதுளி சாராயத்தை யதன்மேல் விட்டான். உடனே அச்சூரணம் சாராயம் பட்டதும் கரைந்து உருவில்லாமல் கிண்ணத்தின் அடியில் படிந்துவிட்டது.

சற்றுநேரத்திற் கெல்லாம் காவலன் சுப்பன் அறைக்கு வந்தான். சுப்பன் உடனே மலர்ந்த முகத்தோடு "நண்பரே! வாரும். இன்று வானம் என்னமோ கோபித்துக் கொண் டிருக்கிறதுபோல் காண்கிறது." என்றான். காவலன் "நல்லமழைவரும். முன்னமே தூறல் ஆரம்பித்து விட்டது. முதலில் காற்று அதிகமாக அடிக்கும்போ லிருந்தது. இப்போது காற்று நின்று விட்டபடியால், நல்ல மழையே பொழியும் என்பதில் சந்தேகமில்லை. சீக்கிரம் போய் நிம்மதியாய்க் கம்மென்று படுத்துக்கொள்ள வேண்டியதே" என்றான்.

சுப்பன் உடனே புட்டியைத்திறந்து முதலில் மருந்து போடப்பட் டிருக்கும் கிண்ணத்தில் விட்டுக் காவலனிடம் அளித்தான். அவன் அதை யருந்தும் போது மற்றகிண்ணத்தில் கொஞ்சம் சாராயம் விட்டுத் தான் அருந்தினான். பிறகு பலகாரங்களை யெடுத்து வைத்துக் காவலனை யுபசரித்து அருந்தச்செய்தான். இடையிடையில் சாராயத்தைத் தாராளமாய் விட்டு அவனுக்குக் கொடுத்துத் தானும் அருந்துபவன்போல் அபிநயித்தானே யன்றி, உண்மையில் தன் வரையில் திட்டமாய் அளவோடேயே யருந்தினான்.

காவலனுக்கு கண்கள் சொருகத் தொடங்கின. "நாம் சாராயம் கொஞ்சம் அதிகமாய்க் குடித்து விட்டோம் போல் காண்கிறது. அதனாற்றான் உறக்கம் வருகிறது" என்று எண்ணி அதைச் சமாளிக்க முயன்றான். வரவர உறக்கம் அதிகமாகிறது. தன் முன் இருப்பது இரண்டு

மூன்று சிரங்களுடைய மனிதன் போலவும் அறையில் எண்ணிறந்த தீபங்கள் எரிவது போலவும் தோன்றின. கடைசியில் தனக்கு இதுகாறும் ஒருபோதும் தோன்ருத அசதியும் இந்திரியங்களின் ஒடுக்கமும் தோன்றின. புத்தியே மிக்க கலவர மடைவதுபோல் தோன்றியது. அப்போதுதான் "ஓகோ! நமக்கென்னமோ தெரியவில்லை. தேகத்திற்கு ஏதோ அபாயகரமான ஆபத்து நேர்கிறது போலிருக்கிறது" என்று எண்ணிஞன்.

மறுவிநாடி யவன்மனதில் ஒருவிதப் பயங்கரமான சந்தேகமுதித்தது. என்னவாயினும் இவர்கள் கள்ளர்கள் என்பதும், சுப்பன்முன்பு தன்னைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் கேட்டிருப்பதும், அவன் அன்புடையவன்போல் நடிப்பதும், தன்னிடம் எவ்வித உதவியும் எதிர்பார்க்கவில்லை யென்று கூறினும் தனக்கு அடிக்கடி அனுவசியமாய்ப் பணமளிப்பதும் யாவும் ஏககாலத்தில் கனவுபோல் அவன் புத்தியிற் பட்டன. மறுவிஞடி சுப்பன் தனக்கு முதலில் ஒரு கிண்ணத்தில் சாராயம் விட்டளித்துவிட்டு பிறகு தன்வரையில் வேறு கிண்ணத்திலருந்தியதும் நினைவிற்கு வந்ததே குபீலென்று அவன் மனதிற் பெரியசந்தேக முதித்தது. உடனே சட்டென்று தனக்குச் சாராயம் அளிக்கப்பட்ட கிண்ணத்தை யெடுக்கக் கரத்தை நீட்டிஞன்.

அதன் பிறகு நடந்தவிஷயம் ஒருவிநாடியில் முடிந்துவிட்டது. சுப்பன் புலிபோல் திடீலென்று அவன்மேற் பாய்ந்து அவன் தொண்டையை யழுத்திப் பிடித்துக் கொண்டு அவனைக் கீழேதள்ளி மார்பின்மேல் முழங்காலை யூன்றிக்கொண்டு தன்ஜேபியில் ஆயத்தமாக வைத்திருந்த குட்டையை யவன் வாயிலடைத்து விட்டு இடுப்பிலிருந்த ஈட்டியை யெடுத்துக்காட்டி "வாய்திறந்தால் கொன்று

விடுவேன். அசைந்தாலும் சரி" என்று கூறிப் பக்கத்தில் படுக்கையின் கீழிருந்த கயிற்றை யெடுத்து அவன் கரங்களையும் கால்களையும் சேர்த்து மஞ்சத்தின் காலில் கட்டி விட்டான்.

சுப்பன் பிறகு அவனை நோக்கி "நண்பனே! நானும் என் தந்தையும் இம்மாதிரி நெடுங்காலம் அடைபட்டுக் கிடக்க முடியாது. நாங்கள் இன்னும் இரண்டு நாட்கள் இதே சிறைச்சாலையி லிருந்தால் மூன்றும் நாள் வேறு சிறைச் சாலைக்குக் கொண்டுபோகப் படுவோம். அங்குச் சேர்ந்தபின் நாங்கள் தப்பித்துக்கொண்டு போக முடியாது. ஆகையால் இங்கிருந்தே நாங்கள் விடுதலைபெற வேண்டும். நீ அறிந்தோ அறியாமலோ, பிரியப்பட்டோ பிரியமில்லாமலோ, இவ்விஷயத்தில் எனக்கும் என் தந்தைக்கும் உதவி செய்வதற்காக மிக்க நன்றியுடையவனாக விருக்கிறேன். இப்போது நான் உனக்குக் கொஞ்சம் கஷ்டம்கொடுப்பதோடு உன் உடைகளை, முக்கியமாய் நீ யுன் அறையில் மாட்டியிருக்கும் மேல்போர்வையை யெடுத்துக் கொண்டு போகவேண்டியது அவசியமாக விருக்கிறது. அவற்றின் கிரையத்தை நான் உனக்குக் கொடுக்கத் தடையில்லை. ஆனால் உன்னிடம் பணமிருப்பதைக் கண்டால் மேல் அதிகாரிகள் நீ இலஞ்சம்பெற்றுக்கொண்டு எனக்கு உதவிசெய்ததாக உன்மேல் குற்றம் சாட்டுவார்கள். எனக்கு உதவி செய்யும் உனக்கு நான் அத்தகைய தீங்கை யொருபோதும் செய்யமாட்டேன். இனி நான் விடைபெற்றுச் செல்கிறேன். உன்னை இந்த நிலைமையில் விட்டுச் செல்வது எனக்கு மிக்க மனவருத்தமாகவேயிருக்கிறது. ஆயினும், நான் உன் வாயில் துணி யடைக்காவிட்டால் நீ அவசரப்பட்டு கூச்சலிட்டு விடுவாய். என் காரியசித்திக்காக நான் மனவருத்தத்தோடு இப்படிச் செய்ய

வேண்டியிருக்கிறது. இதற்காக என்னை மன்னிக்கவேண்டும். ஆனல் உன் அன்பிற்காகவும் நீ செய்த உதவிக்காகவும் நான் எப்போதும் நன்றியுடையவனுகவேயிருப்பேன்'' என்று கூறிவிட்டுத் தன் உடைகளை யவனுக்கணிந்துவிட்டு அவனுடைகளைத் தானணிந்துகொண்டு அறையை மூடிப் பூட்டிக்கொண்டு வெளிப்பட்டான்.

காவலனே திப்பிரமை யடைந்து விட்டான். தான் பெருமோசம் போய்விட்டதை யுணர்ந்து கொண்டான். சுப்பன் பேசும் நயமான வார்த்தைகளுக்கும் அவன் செய்கைக்குமுள்ள வித்தியாசத்தைக் கருதியபோது அவன் மனம் தீப்பற்றி யெரிந்தது. அவன் கண்களில் கோபத் தணல் வீசியது. என்ன செய்வான் பாபம். தன் அவயவங்களோ தன் வயத்திலில்லை. ஏமாந்து சிக்கிக்கொண்டான். புத்தி பிசகி மூடத்தனமாய் ஒரு காரியத்தைச் செய்தபின் வருத்தப்படுவதில் பயனென்ன? "இவர்கள் கள்ளர்கள், இவர்களுக்கு நம்மேல் இயற்கையில் விரோதமும் வெறுப்புமே யிருக்கவேண்டும். இவர்கள் நம்மிடம் பிரியமிருப்பதுபோல் நடிப்பது ஏதோ சுயகாரியத்திற்காகவே யிருக்கவேண்டும். இவர்களன்பு உண்மையென்று நாம் நம்பலாகாது. மிக்க ஜாக்கிரதையாகவே யிருக்கவேண்டும்'' என்று இவன் முன்னமே கருதி யிருக்கவேண்டும்.

" எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு''

என்ற பொய்யா மொழியார் வாக்கை மறந்து நடந்தபின் துக்கிப்பதில் என்ன பயன்?

சுப்பன், காவலனை யறைக்குள் கட்டிப்போட்டுவிட்டுக் கதவைமூடிப்பூட்டிக்கொண்டு நேராய் அக்காவலன் அறைக்குச் சென்று அவன் போர்வையை யெடுத்துப் போர்த்திக் கொண்டுபோய்ச் சாவியை மாட்டவேண்டிய விடத்தில்

மாட்டிவிட்டான். அச்சமயம் வெளிவாயிற்படியில் பாரா மாற்றிக்கொள்ளவேண்டிய இருவரும் தங்கள் சடங்கைச் செய்து கொண்டிருப்பதால் இவனை யொருவரும் சரியாய்க் கவனிக்கவில்லை. சுப்பன் உயரத்திலும்பருமனிலும் அக்காவலன் போலவே யிருப்பதாலும், அவன் அணிந்திருக்கும் போர்வையாலும் அவர்கள் அவனைப்பற்றிச் சற்றும் சந்தேகங் கொள்ளவில்லை. இதனால் சுப்பன் இரண்டொரு நிமிடங்களில் சிறைச்சாலையின் வெளிவாயிற் படியைக் கடந்து புறப்பட்டான்.

கட்டிடத்தைவிட்டு வெளிப்பட்டதே அவனுக்கு ஒருவித உற்சாகமும் சந்தோஷமும் உண்டாயின. அதனால் அபூர்வமான தேக பலம் தோன்றியது. மனம் சோர்ந்தால் தேகபலம் குன்றிவிடுவது இயற்கை. தேக பலத்தைக் காட்டினும் மனோ பலமே ஒருவனுக்கு எப்போதும் மிக்க அதிகம். மனதில் நம்பிக்கையும் பலமும் இருந்தால் ஒருவன் அபூர்வமான காரியங்களைச் செய்வான் என்பதற்குப் பல திருட்டாந்தங்களுண்டு. ஈண்டு ஒன்றைமட்டும் கூறுகிறோம்:—

நெபோலியன் சக்கிரவர்த்தி ஐரோப்பாவிலுள்ள ஏறக்குறைய எல்லா இராஜ்ஜியங்களையும் செயித்தார். அவர் தமது சேனைகளைப்பற்றிய விஷயங்களை மிக்க சிரத்தையோடு தாமே நேரில் கவனிப்பது வழக்கம். அக்குணம் இருந்திராவிடின் ஒரு பீரங்கிப் படையில் லெப்டினெட் உத்தியோகத்திலிருந்த ஒருவன் அத்தகைய தேசத்திற்கே சக்கிரவர்த்தியாகவும் உலகப் புகழ்ச்சிக்குரியவனாகவும் ஆக முடியுமோ? முடியாது. ஒரு இடத்தில் அவர் தமது சைனியத்தோடு பாளையமிறங்கி யிருக்கிறார். காலையில் எதிரிகளோடு சண்டை தொடங்கவேண்டும். ஆகையால் இரவு மிக்க ஜாக்கிரதையாக விருக்கவேண்டியது அவசியம்.

ஆகையால், நெபோலியன் சக்கிரவர்த்தியே தமது படைவீரரனைவரும் அவரவர்கள் இடத்தில் எச்சரிக்கையாகவிருக்கிறார்களாவென்று கண்டறிவதற்காக, நடு இரவில் சாதாரண வுடையோடு பாளைத்திற்குள் சோதனைக்குப் புறப்பட்டார். ஒரு இடத்தில் செல்லும்போது அங்கு காவல் நிற்பவன் தாம் அருகில் செல்லும்போதும் பேசாமலிருப்பதைக்கண்டு மெதுவாக அவன் கிட்டச்சென்றார்.

இராணுவச் சட்டத்தின்படி பாரா இருப்பவன் ஒருவர் வருவதைக் கண்டதே "யார் வருவது? நில்" என்று கூறவேண்டும். வருகிற ஆள் "நான் நண்பனே" என்று கூறினால் அவன் அருகில் வந்தபின் சரியாக உண்மையைத் தெரிந்துகொண்டே அவனை யப்புறம் செல்ல விடவேண்டும். வந்தவன் சரியான பதில் கொடாமல் பேசாமல் இன்னும் வருவதாயின் அவனைச் சுட்டு விடலாம். இது இராணுவச் சட்டம்.

நெபோலியன் சக்கிரவர்த்தி அருகிற் செல்லும்போது கூட அங்கு பாரா நின்றிருப்பவன் ஒன்றும் பேசாமல் கற்சிலைபோல் தன் கையிலிருக்கும் துப்பாக்கியைத் தரையில் நாட்டியபடி அதன்மேல் தலையைச் சாய்த்துக்கொண்டிருக்கிறான். அவன் பக்கத்தில் பழுதாய்விட்ட ஒரு பீரங்கி கிடக்கிறது. சக்கரவர்த்தி யவனருகிற் சென்று பார்த்தார். அவன் நின்றபடி நித்திரை செய்கிறான் என்றுணர்ந்துகொண்டார். உடனே அவன் கரத்தில் பிடித்திருந்த துப்பாக்கியை மெதுவாக எடுத்துக்கொண்டார்.

அப்போதுண்டான தேக அசைவால் அவன் தட்டென்று விழித்துக்கொண்டான். தன்னிடமிருந்த துப்பாக்கி எடுத்துக்கொள்ளப்பட்டது அவனுக்குத் தெரியாது. சக்கிரவர்த்தி கோபத்தோடு "அட்டென்ஷன்" என்றார். அதுஜாக்கிரதையாக ஒழுங்காக நில் என்று கூறும்

ஒரு குறிப்பு வார்த்தை. அதை மட்டுமே அவன் கேட்டான். யாரோ மேல் உத்தியோகஸ்தர் தணிக்கைப்பார்க்க வந்தார்கள் என்று கருதித் திகிலோடு நோக்கினன். இராணுவ விஷயங்களில் சட்ட திட்டங்களை மிக்க கண்டிப்பாகக் கவனிக்கும் தன் சக்கிரவர்த்தியே யெதிரில் நிற்பதைக் கண்டான். கையில் துப்பாக்கியில்லாததை யுணர்ந்தான். நாம் உறங்கி விட்டோம், துப்பாக்கி கைநழுவிக் கீழே விழுந்து விட்டதென்று எண்ணிக்கொண்டான்.

என்ன செய்வான் பாபம்! இப்போது துப்பாக்கியைக் கையில் பிடித்துக்கொண்டு ஒழுங்கின்படி நிற்கவேண்டும். நமது துப்பாக்கி கீழே அருகில் தான் விழுந்திருக்கும் என்பது அவன் பூரண நம்பிக்கை. அவன் மன நாட்டத்தில் துப்பாக்கி தான் இருக்கிறது. ஆகையால் குனிந்ததும் அருகிலிருந்த பீரங்கியைச் சட்டென்று தூக்கித் துப்பாக்கியைப் பிடிப்பதுபோல் நிற்க வைத்துப் பிடித்துக்கொண்டான்.

சக்கிரவர்த்தி மிக்க சூக்குமபுத்தி யுடையவர். அதிலும் நெபோலியன் சக்கிரவர்த்தி மனோதத்துவங்களை நன்கறிந்தவர். அவர் தாம் நினைத்தபோது வெடிதீர்த்துக்கொண்டிருக்கும் பீரங்கியின் கீழேயே படுத்துக் கருதிய நேரம் நித்திரைசெய்யும் சக்தியுடையவர். அவர் நடந்த உண்மையை யுணர்ந்து அவனை நோக்கி "உன்கையிலிருப்பது என்ன?" என்றார்.

அதைக் கேட்டதே போர்வீரன் தன்கையி லிருப்பது துப்பாக்கியல்ல பீரங்கியென்று கண்டதும் "அப்பா!" என்று அதைத் தடாலென்று விட்டுவிட்டான். இப்போது அப்பீரங்கியைத் தூக்கும்படி யவனுக்குச் சக்தியளித்தது எது? மனோவல்லமையே யன்றி வேறில்லை. மனதினிடம் அபாரமான வல்லமையடங்கி யிருக்கிறது. மேற்கண்ட

மாதிரி சமயங்களில் அவ்வல்லமை தானே நம்முணர்ச்சி யின்றி வெளிவருகிறது. மனதின் தத்துவத்தை யுணர்ந்த அறிவாளிகள் அதைத் தம் வயப்படுத்திக்கொண்டு அதைக் கொண்டே அபூர்வமான காரியங்களை யெல்லாம் சாதிக்கிருர்கள்.

சுப்பன் சிறைச்சாலையை விட்டு வெளிப்பட்டதும் கொஞ்சதூரம் அதாவது சிறைச்சாலை யிருக்கும் வீதியைக் கடக்குமட்டும் சாதாரண மனிதர் நடப்பதுபோல் மெதுவாய் நடந்தான் அவ்வீதியைவிட்டு அடுத்த வீதியில் நுழையும் போது அங்கு இருள் சூழ்ந்திருந்த ஒரு இடத்தில் நின்று தன் மேல்போர்வையைக் கழற்றிச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு அதிவேகமாய் நடந்து வீரப்பன் வீட்டை நோக்கிச் சென்ருன்.

---

## 29—வது அத்தியாயம்.

மேல் அத்தியாயத்தி னிறுதியிற் கண்ட சம்பவங்கள் நடந்த அதே யிரவு சுப்பன் சிறைச்சாலையை விட்டு வெளிப்பட்டதும் மழைபொழியத் தொடங்கியது. சுப்பன் தந்தையாகிய கேசவன் காவலன் கடைசியாகத் தன்னை விட்டுச் சென்றதும், வீரப்பன் அப்போதைக் கப்போது தன்னிடம் அனுப்பிய கயிறுகளை யெல்லாம் படுக்கையின் கீழிருந்து எடுத்து வெளியில் வைத்தான். அதன் பின் தன் படுக்கைமே லிருந்த விரிப்பை யெடுத்துக் கிழித்து அவற்றையும் கயிறுகளையும் சேர்த்துத் திரித்து ஒரு நூலேணியாகக் கட்டினுன். அதோடு ஒரு நீண்ட கயிறும் திரித்துக் கொண்டான். அதன்பின் பின்பக்கம் சாளரத்தின் வழியாய்க் காவலிருப்பவனைக் கவனித்தான்.

அக்காவலன் இரவு சரியாகப் பனிரண்டுமணிக்கு

இன்னொருவனால் மாற்றப்படுவான். அதனால் இவனை யேமாற்றி விட்டுச் சென்றால் இரவு பனிரண்டு மணிக்குச் சங்கதி வெளிப்பட்டு விடும். பிறகு வருகிறவன் காலத்தில் அவனை யெவ்விதத்திலேனும் வஞ்சித்துச் சென்றால் மறு நாள் காலை ஏழுமணிக்குப்பின் அவனைமாற்றும் ஆள் வந்த பின்பே சங்கதி யெதுவாயினும் வெளிவரும். அதுகாறும் வராது. ஆகையால் கேசவன் அங்கு பின்பக்கம் காவலர் மாறுமட்டும் தன் காரியத்தைத் தொடங்க எதிர்பார்த் துக் கொண்டிருந்தான்.

இரவு மணி பனிரண்டாகும்போது மழை மும்முரமா யடிக்கத் தொடங்கியது. இரண்டொரு நிமிடங்களில் காவ லர் மாறிவிட்டார்கள். இருளோ பயங்கரமாக விருந்தது. ஆனால் கள்ளனுக்கு அந்த இருள் மிக்க அனுகூலமானதாக விருந்தது. மாறிவந்த காவலன் ஓயாமல் முன்னும் பின் னும் துரிதமாக ஒரேநடையாய் நடந்து காவலிருப்பதற் குப் பதிலாக இரண்டு கோடிகளிலும் சில நிமிடங்கள் தங்கிவரத் தொடங்கினான். அவன் என்ன செய்வான் பாபம்! மழைத்தூறல் நெறநெறவென்று முகத்திலடிக் கிறது. ஒரு அடிக்கு முன் ஆள் நின்றால் தெரியாது. அத் தகைய காலத்தில் ஏதாவது விசேஷம் நடக்குமென்று யார் தான் எதிர் பார்ப்பார்கள். அதோடு மழையின் நோக்கத்தை யறிந்து "நாம் அர்த்தராத்திரியிலிருந்து காலை வரை பாரா கொடுக்க வேண்டுமே. அப்போது தான் குளிரும் அதிகமாகவிருக்கும்" என்று சிந்தித்துக் கொஞ்சம் அதிகமாகவே சாராயம் அருந்திவிட்டு வந்திருக் கிறான்.

கேசவனுக்கு அது மிக்க அனுகூலமான சந்தர்ப் பமே. அவன் மாற்றுக் காவல் வந்ததே தன் அறையில் இருந்த தீபத்தை யணைத்துவிட்டுச் சாளரத்தை மெது

வாகத் திறந்தான். காவலன் சாளரத்தினருகில் வருவதும் எட்டப்போவதும், எந்தத் திக்கில் செல்வதும் அவன் காலடிச் சத்தத்தால் கேசவன் நன்ருகவறிந்து கொள்ளலாம். ஆகையால் மணி பனிரண்டிற்குச் சரியாகக் காவலர் மாறியதும் சாளரத்தில் வந்து நின்று கவனித்தான். எங்கும் காரிருள் சூழ்ந்திருக்கிறது. அதோடு காவலன் கோடிகளில் சென்றதும் உடனே திரும்பி வருவதில்லையென்றும் ஐந்தாறு நிமிடங்கள், சில சமயங்களில் பத்து நிமிடங்கள் கூடத் தங்கித் தாமதித்து வருகிருனென்றும் அறிந்து கொண்டான்.

ஆச்சு மணி ஒன்றடித்தது காவலன் ஓரங்களில் அதிக நேரம் தாமதிக்கத் தொடங்கினன். கேசவன் இனி நாம் ஆலசியம் செய்யலாகாதென்று கருதி, தான் முன்னமே ஒரு பக்கம் அறுத்து விட்டு அறுபட்ட வாய்கள் தெரியாவண்ணம் கறுப்புமெழுகு பூசியிருக்கும் சாளரக் கம்பிகள் நான்கையும் மறுபக்கம் அடியோடிழுத்து வளைத்துவிட்டு அவற்றில் தான் தயாரித்து வைத்திருந்த ஒரு நீண்ட பலமான கயிற்றின் ஒரு முனையைக் கட்டி விட்டு மற்ற கயிற்றை வெளிப்பக்கம் விட்டு விட்டான். தான் தயாரித்து வைத்திருந்த நூலேணியை யெடுத்து இடுப்பில் சுற்றிக்கொண்டு தன் உடைகளை யொரு சிறு மூட்டையாக்கி முதுகின்மேல் கட்டிக்கொண்டு சாளரத்தினருகில் மஞ்சத்தை யிழுத்து வைத்து ஆயத்தமாக நின்று வெளியில் பார்த்துக்கொண் டிருந்தான்.

பத்துநிமிடத்திற்குள் பாராக்காரன் தன் சாளரத்தருகில் வந்து அதைக் கடந்து செல்வதை யறிந்தான். ஒரு நிமிடம் கழிந்து மஞ்சத்தின் மேலேறியதும் சாளரத்திலிருந்து தொங்கும் கயிற்றின் வழியாய்த் துரிதமாக மறுபக்கம் இறங்கியதும் காவலன் சென்ற கோடிக்கு மறு

கோடியில் சென்று அங்கிருந்த அந்தகாரத்தில் மறைந்து நின்றான். சுமார் பத்து நிமிடங்கள் கழித்து பாராக்காரன் தான் இருக்கும் கோடியை நோக்கி வரும் காலடிச் சத்தம் கேட்டது. உடனே தன் நண்பனாகிய வீரப்பன் அனுப்பிய ஒரு பொட்டணத்தை யுட்சேபியிலிருந்து எடுத்து அதற்குள்ளிருந்ததை யெடுத்தான். அது சுமார் ஆறங்குல அகல நீளமுள்ள பிசின் தடவப்பட்ட சீலைத்துண்டு. அதன்றி மற்றொரு சேபியிலிருந்த ஒரு சீலைத்துண்டையும் எடுத்து ஆயத்தமாக மேல் ஜேபியில் வைத்துக் கொண்டான்.

பாராக்காரன் தானிருக்குமிடத்தை நெருங்குவதையறிந்ததே கேசவன் மேற்கண்ட இரண்டு வஸ்துக்களையும் ஆயத்தமாகக் கரங்களிலெடுத்து வைத்துகொண்டு அங்குள்ள மூலையில் பதுங்கிக்கொண்டான். காவலன் தன் வழக்கப்போல் அங்கு வந்ததும் அங்கிருந்த ஒரு குத்துக் கல்லின்மேல் உட்கார்ந்தான். அக்கல்லின் பின்னால் ஆறடி தூரத்தில் தான் கேசவன் பதுங்கிக் கொண்டிருக்கிறான்.

காவலன் மழையில் அடிப்பட்டு ஆயாசத்தோடு வந்து அங்கு உட்கார்ந்ததும் கேசவன் புலிபோல் பாய்ந்து அவன்மேல் வீழ்ந்து அவன் வாயின்மேல் பிசின் தடவிய சீலையை யப்பியதும் அவனைக் கீழே தள்ளி சீலைத்துண்டையவன் சிரசின்மேல் போட்டு மூடிப்பிடித்துக்கொண்டு அவன் மார்பின்மேல் முழங்காலை யழுத்தியபடி "நீ வாய் திறக்க முயன்றால் இந்த ஈட்டியால் உடனே குத்திவிடுவேன்" என்று பயமுறுத்தினான்.

பாபம் அக்காவலன் தனக்குத் திடீலென்று இத்தகைய ஆபத்து நேர்ந்ததால் அவனுக்கு அது இன்னதென்று புலப்படவில்லை. தன் எதிரி யாரென்றேனும், அவர்கள் எத்தனை பேரென்றும் ஒன்றும் தெரியாது.

எல்லாம் பெரும் பீதியாகவே அவனுக்கு அச்சமயம் தோன்றியது. தன் உயிரே ஆபத்திலிருக்கிறதென்று மட்டுமே அச்சமயம் அவனுக்குப் புலப்பட்டது.

ஆகையால் அவன் ஒன்றையும் கருதாமல் தன் உயிரைப் பாதுகாப்பதொன்றையே கருதினன். அந்தோ! யாருக்கும் மனைவிமக்கள் முதலிய உயிர்ச் சார்பையும், தனம் தானியம் பூமி முதலிய பொருட் சார்பையும விடத் தன் உயிரே அதிக இனிப்புடையதன்றோ. ஆகையால் அப் பாராக்காரன் "என்னையொன்றும் செய்யவேண்டாம், உயிரோடு விட்டு விடுங்கள். நான் பேசாமலே யிருக்கிறேன்" என்று சமிக்கை காட்டினன்.

கேசவன் நமது காரியம் இவ்வளவு அனுகூலமாக முடிந்ததே போது மென்று கருதித் தனக்குள் சந்தோஷமடைந்து, அக்காவலனை, தான் கொண்டுவந்த கயிற்றால் கட்டித் தூக்கிக்கொண்டுபோய் அங்கு மதில் சுவர் ஓரத்திலிருந்த சிறு வீட்டில் போட்டு அதை மூடித்தாளிட்டுக்கொண்டு அங்கிருந்து வெளிவந்தான்.

இப்போது கேசவன் அங்கிருக்கும் மதில் சுவரைமட்டும் தாண்டி விட்டால் வெளிப்பட்டு விடலாம். அவனுக்கு இச்சங்கதி தெரிந்தே யாவற்றிற்கும் ஆயத்தமாக விருக்கிறான். அவன் சிறைச்சாலையிலிருந்து தயாரித்துக் கொண்டு வந்திருக்கும் நூலேணியின் ஒருமுனையில் இரண்டு இரும்புக் கொக்கிகள் கட்டப்பட் டிருக்கின்றன. காவலனை அவன் அறையில் போட்டு அடைத்து விடச் சந்தர்ப்பம் வாய்ந்தது அவன் எதிர்பாராத நற்காலம்.

அதன்பிறகு கேசவன், வீரப்பன் தனக்கு எழுதிய கடிதத்தில் குறித்த ஏற்பாட்டின்படி அம்மதில் சுவரின் வடகோடியிற் சென்று மூன்று சிறியகற்களை மறுபக்கம் எறிந்தான். இரண்டொரு நிமிடங்களில் மறுபக்க மிருந்து ஒரு

வெள்ளைப்பந்து இவன் எதிரில்வந்து விழுந்தது. அது "நாங்கள் ஆயத்தமாய் உன் உதவிக்காக வந்திருக்கிறோம். நீ யாதொன்றுக்கும் அஞ்சாமல் வெளிவரலாம்" என்று உணர்வதற்காக இவர்களுக்குள் முன்னுடியே யேற்படுத்திக்கொண்ட ஒரு குறியாகும். ஆகையால் அக்குறியைக் கண்டதும் கேசவன் "தன் புத்திரன் முதல் நண்பர்களெல்லாம் வெளியில் துணைவந்திருக்கிறார்கள்" என்றுணர்ந்து, பூரண தைரியத்தோடு, காவலன் வீட்டின் கூரைமேல் நூலேணியை விசிறியெறிந்தான். அந்த நூலேணியிலிருந்த கொக்கிகள் கூரையில் மாட்டிக்கொண்டன.

அதன்மேல் கேசவன் பக்குவமாய் அந்நூலேணியின் மேலேறி அச்சிறு வீட்டின் உச்சியை யடைந்ததும், நூலேணியை மேலுக்கிழுத்து எடுத்துக் கொண்டான். அக்கூரை மதிலின் ஓரத்தில் இருக்கிறது. ஆனால் மதில்சுவரின் உச்சி கூரையின் உச்சியிலிருந்து ஆறடி உயரமே யிருக்கிறது. கேசவன் மறுபடி தன் நூலேணியில் கொக்கிகளிருக்கும் முனையைச் சுவர்மேல் வீசியெறிந்தான். ஐந்தாறு முறை யெறிந்தபின் கொக்கிகள் சுவரின் சிரசில் சரியாகமாட்டிக் கொண்டன. அப்போது தான் கேசவனுக்குத் தைரியம் உண்டாயிற்று. ஏனெனில் இனிச்சுவரின் உச்சியை யடைந்ததும் ஏணியையெடுத்து மறுபக்கம் மாட்டித் தொங்கவிட்டு வெளியில் போய் விடலாம். ஆயினும் அது காறும் சந்தேகமும் திகிலுமே. ஏனெனில் எந்தவேளையில் வேண்டுமாயினும் சிறைச்சாலையில் சம்பந்தப்பட்ட எந்த உத்தியோகிஸ்தனேனும் மேல்பார்வை பார்க்கத் திடீலென்று வந்து விடலாகும்.

ஆனால் கெட்ட காரியத்திற்கு எல்லா அனுகூலங்களும் ஒழுங்காக அமைவது இக்கலிகாலத்தின் இயற்கை - நற்காலத்திற்கோ இடையூறுகளும் இக்கட்டுகளுமே நேரி

டும். ஆகையால் அச்சமயம் எந்த உத்தியோகஸ்தனும் அம்மழையில் அங்குவரவில்லை. கேசவன் தான் சுவரின் மேல் எறிந்த நூலேணியை யிழுத்துப்பார்த்து அது தன் பளுவைத் தாங்கக்கூடிய விதமாய் சுவரில் பற்றிக்கொண் டிருக்கிற தென்பதை யுணர்ந்ததும் அதன் வழியாய் மேலேறினன்.

கேசவன் மதில் சுவரின் உச்சிக்குச் சென்றதே மறு பக்கம் தன் நண்பர்கள் ஆயத்தமாக வந்திருக்கிறார்கள் என்பதைப் பிரத்தியட்சமாய்க் கண்டான். இவன் சுவரின் மேல் ஏறியுட்கார்ந்த பின் தான் ஏறிவந்த நூலேணியை யெடுத்து மறுபக்கம், அதாவது வெளிப்பக்கம் தொங்க விட்டு அதன் வழியாகத்தான் கீழிறங்கவேண்டும். ஆனல் இப்போதோ இவன் சிரம் மதில் சுவருக்குமேல் வருவ தைக் கண்டதே எல்லாவற்றிற்கும் ஆயத்தமாக வந்திருந்த அவன் நண்பர்கள் இவனுக்கு நேராக மதில் சுவரில் ஒரு ஏணியை நாட்டினர்கள்,

கேசவன் தன் நூலேணியை யெடுத்து மறுபக்கம் தன் நண்பர்களிடம் எறிந்துவிட்டு அவர்கள் வைத்த ஏணி வழியாய்க் கீழிறங்கிச் சிறைச்சாலையை விட்டு வெளிப்பட் டான். கேசவன் கீழே பூமியில் காலைவைத்ததும் அவன் புத்திரனகிய சுப்பன் வந்து அவனை யாலிங்கனம் செய்து கொண்டான். கேசவனுக்குத் தன் புத்திரன் தனக்கு முன்பே சிறைச்சாலையிலிருந்து வெளி வந்திருப் பதைக் கண்டது பேரானந்தத்தை விளைவித்தது. "காக் கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சன்றோ"—

இக்கள்ளருடைய சாமார்த்தியமும் புத்திசூக்குமமும் விசேஷமானவைகளே. ஆனல் அத்தகைய புத்தி சாமார்த் தியத்தை யவர்கள் நல்ல வழியில் உபயோகித்திருந்தால் உலகில் செல்வமும் கீர்த்தியும் பெறலாம். மனிதனுக்கு

இயற்கையாகவே பகவான் மனதில் அபூர்வமான வல்லமையை யமைத்திருக்கிறார். ஆனால் மனிதரில் சிலர் அந்த வல்லமையிருப்பதை யுணர்ந்து அதைக் கையாளுகிறார்கள். அப்படிச் செய்வோரிலும் சிலர் அந்த வல்லமையைக் கெட்ட வழியிலுபயோகித்து அல்லற்படுகிறார்கள். ஒரு கள்ளனிடமுள்ள புத்தி சாமார்த்தியமும் தந்திரமும் தைரியமும் ஒரு துப்பறிபவனுக்குள்ள சாமார்த்தியமும் தந்திரமும் தைரியமும் ஒன்றே தான். கள்ளன் தன் அரிய குணங்களைக் களவாடுவதில் உபயோகிக்கிறான். அதனால் கடைசியில் பலமான தண்டனை யடைகிறான். துப்பறிபவன் தன் வல்லமையை அக்கள்ளனைப் பிடிப்பதில் உபயோகிக்கிறான். அவன் புகழும் பொருளும் அடைகிறான்.

* * * *

பூபாலப்பிள்ளை இராஜாமணி பங்கஜம் மூவரும் தங்கம்மாளும் கள்ளர் இருந்த வீட்டை விட்டுப் புறப்பட்டபின் பூபாலப்பிள்ளையின் வீட்டிற்குச் சென்றார்கள். பூபாலப்பிள்ளையின் கலியாணம் மிகவும் இரகசியமாகவே நடந்தது என்பதைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறோம். இப்போது அதைக் கொண்டாடுவதற்காகப் பங்கஜம் என்ற மார்த்தாண்டம் சீமாட்டி தனது மாளிகையில் ஒரு விருந்து வைத்திருக்கிறாள் என்றும் உரைத்திருக்கிறோம். அச்சீமாட்டியின் மாளிகை விசாலமானது. மிக்க பணச் செலவுசெய்து அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அதைச் சூழ்ந்து மிக்க அழகான ஒரு தோட்டமிருந்தது. இரண்டு மூன்று நாட்கள் விருந்து மிக்க தடபுடலாக நடந்தது. பூபாலப்பிள்ளையின் நண்பர்களும், அநேகம் செல்வவந்தர்களும், பெரிய மனிதர்களும் வந்திருந்தார்கள். இராஜாமணியின் நாணயமான நடக்கைகளையும், நடையுடை பாவ

னை களையும் கண்ட அனைவரும் பூபாலப்பிள்ளை அடைந்த மனைவியைப்பற்றி மிகப்புகழ்ந்து சந்தோஷம் காட்டினார்கள். அவளுடைய உருவத்தையும் அவள் நடக்கும்மாதிரியையும் மட்டுமே யாவரும் கண்டார்களன்றி அவள் யார் என்று ஒருவருக்கும் அறிவிக்கப்படவில்லை.

இம்மாதிரி மூன்று நாட்கள் விருந்து நடந்தது. பிறகு பூபாலப்பிள்ளையும் அவர் மனைவியும் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். தங்கம்மாளுக்கு நடந்த சங்கதி முழுமையும் தெரியுமாதலால் இப்போது பூபாலப் பிள்ளையும் அவர் மனைவியும் ஒன்று சேர்ந்துவிட்டதைப் பற்றி அவள் சொல்லொணுச் சந்தோஷமடைந்தாள். இராஜாமணி இப்போது பூபாலப்பிள்ளை வீட்டின் எஜமானியாய்விட்டாள். பூபாலப்பிள்ளையின் மனக்கலக்கம் முழுமையும் சற்றேறக் குறைய ஒழிந்தது. ஏன் சற்றேறக்குறையவென்று கூறினேமெனின் தமது மனைவியின் தந்தையும் தமையனும் அதே நகரச் சிறைச்சாலையில் சிறைவாசத்திலிருப்பது அவர் மனதிற்குச் சஞ்சலத்தை யளித்துக்கொண்டே யிருந்தது.

ஏனெனில், அவர்கள் அயோக்கியர்கள். தம்மிடம் அவர்களுக் கிருக்கும் சம்பந்தத்தை வெளியிடுவதில்லையென்று அக்கள்ள ரிருவரும் சத்தியம் செய்திருந்தாலும், அப்படிச் செய்தால் தாங்கள் செய்த கொலைக்குற்றம் பகிரங்கப் படுத்தப்படும் என்று அவர்களுக்குக் கண்டிப்பாய் அறிவிக்கப்பட் டிருப்பினும் எந்தச் சமயத்தில் அவர்கள் பண ஆசையால் ஆத்திரங்கொண்டு, அல்லது குடிவெறியால் பெருமைக்காக அச்சங்கதியை வெளியிட்டு விடுவார்களோ என்பது அவருக்கு அச்சமாகவே யிருந்தது.

இராஜாமணிக்கோ, தன் தந்தையும் தமையனும் சிறைச்சாலையி லிருக்கிறார்களே என்று மனதில் வியாகூலம்

இருந்து கொண்டே யிருந்தது. ஆனால் தன் புருடன் விஷயத்தில் அவளுக்கு எல்லா விஷயங்களிலும் மிக்க திருப்தியாகவே யிருந்தது. முதலாவது தன் கணவன் தன்னை மணம் புரிந்தபோது ஏதோ தமது சுயநலத்தைக் கருதி ஒப்புக்கு நம்மை மணம்புரிந்தாரே யன்றி நம்மேல் உண்மையான காதல் அவருக்கில்லை யென்றே அப்போதிருந்த சந்தர்ப்பப்படி கருதினாள்,

ஆனால் அவள் உண்மையான கற்புடையவளானதால் தன் கணவன்மேல் பூரண அன்புவைத்து அவன் இருக்குமிடத்திற் கருகிலேயே யிருக்கத் தீர்மானித்தாள். அதோடு தன் தந்தை தமையன் இவர்களுடைய நடக்கையில் அவளுக்கு வெறுப்பே. அவளுடைய இயற்கைக் குணத்திற்கு அவர்கள் நடக்கை சற்றும் சம்மதமானதாக விருக்கவில்லை இவர்களை விட்டு எப்போது நீங்கிவிடலாமோ வென்று தன் அனுகூல காலத்தை யெதிர்பார்த்துக்கொண் டிருந்தாள். அவர்களது மேல்நாட்டு ஆசாரப்படி கலியாணப் பருவம் வந்த ஒருபெண் தன் அந்தஸ்திற்குக் குறையாத அந்தஸ்துடைய வாலிப புருடர்கள் இருக்குமிடத்தில் நடமாடவேண்டும். அதன்மேல் எந்த வாலிபனாவது அவள் மேல் காதல் கொள்ளவேண்டும். அவளுக்கும் அவன்மேல் பரஸ்பரக்காதல் உண்டாக வேண்டும். இருவரும் இரண்டொருமாதமாவது பழகவேண்டும். கடைசியில் ஆடவன் அவளை நோக்கி நான் உன்மேல் காதல் கொண்டிருக்கிறேன். உன்னை மணம்புரிய விரும்புகிறேன் என்று கூறவேண்டும். அதற்கு அவள் ஒப்புக்கொண்டால் பிறகே அவளுடைய பெற்றோர்க்கு அதைப்பற்றிக் கூறுவாள். இவர்களுக்குள் மனங்கலந்து விட்டபின் இவர்களுக்குப் பிரியமான காலத்தில் தான் அதைப் பெரியோரிட மறிவிப்பார்கள்.

நேயர்களே! ஈண்டு ஒரு விஷயத்தைப் பற்றிக் கூற விரும்புகிறோம். ஒரு பெண்ணை மணம்புரியக் கொடுப்பதெனின், தந்தை மணமகன் கல்வி யுடையவனா வென்பதைத் தான் கவனிப்பான். பெண்ணின் தாயோ மருமகன் செல்வமுடையவனா என்பதைக் கவனிப்பாள். பெண்ணோ கைநிறைந்த பொன்னைவிட கண்ணுக்கினிய புருடனே வேண்டுமென்று கருதுவாள். இது ஆன்றோர் அனுபவமாகக் கண்டறிந்த உண்மை.

இது ஒரு பக்கமிருக்கட்டும். உலக அனுபவம் என்னென்று பார்ப்போம. ஒரு வாலிபன் வீதி வழியே சென்றுகொண் டிருக்கிறான். ஒரு வீட்டின் வாயிற்படியில் ஒரு பெண் நிற்பதைக்கண்டு அவள்மேல் அடக்க முடியாத காதல்கொண்டு அவள் யாரென்று விசாரிக்கிறான். அவள் விலை மாது என்று தெரிந்தால் "சரி ஒரு நாளைக்கு எவ்வளவாயினும் சரி, கொடுத்துவிட்டு இவளிடம் சுகமனுபவிக்கலாம்" என்று கருதுகிறான்.

இப்போதிவன் மனதில் காதலையுண்டாக்கியது அவள் உருவமேயன்றி, அவள் குணம், நடக்கை, குலம் முதலிய எதுவுமல்ல. ஆடவர்கள் மாதர்களின் மாயவலையிற் சிக்கியிடர்ப்படுவது அவர்கள் அவயவங்களைக் கண்டு மயங்கியேயன்றி வேறில்லை.

உலக அனுபவம் சற்றும் அறியாத வாலிபர்கள், எதற்காக நாம் மணம்புரிய வேண்டும், எத்தகைய கன்னிகை நாம் மணம் புரியத் தக்கவள் என்ற ஒன்றையுமறியாத வாலிபர்கள், கண்ணுக்குப் பிரியமான பெண்ணையே விரும்புவார்கள். ஆகையால் தான் நமது முன்னோர் தம் மைந்தருக்குத் தாமே பெண்ணைத் தேடி மணம் செய்விக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டார்கள்.

இராஜாமணியின் தாயார் இறந்தபின் அவள் தந்தை

யும் தமையனும் கெட்டவழியில் நடக்கத்தொடங்கியபடியால் அவர்களிடம் சரியான மனிதர் வருவதில்லை. ஆகையால் இராஜாமணிக்கு மணம்புரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. அன்று அத்தனிவீட்டில் முதல் முதல் பூபாலப்பிள்ளையைக் கண்டவுடனே அவள் அவர்மேல் விருப்பங்கொண்டாள். ஆயினும் "சே! புது மனிதன். முன்பின் அறிமுகமில்லாதவன். இவன்மேல் நமது மனம் நாடுவது தவறு. நாம் இவனுடன் சம்பாஷிக்க முயன்றால் மனம் அதிகமாக இவன்மேல் பற்றிக்கொள்ளும்" என்று கருதியே உடனே எழுந்து சமையலறைக்குப் போய்விட்டாள்.

பிறகு தன் தந்தை பூபாலப்பிள்ளையிடம் பணம் இருப்பதைக்கண்டு அவரைக் களவாடவும் கொலை செய்யவும் தன் தமையனோடு ஆலோசனை செய்தபோது, இயற்கையாகவே அந்நடக்கையில் அவளுக்கு விருப்பமில்லை. அதோடு தான் பிரியங்கொண்ட ஒருவனுக்கு அத்தகைய ஆபத்து நேர்வதைத் தடுக்காமலிருக்க அவள் மனம் இடந்தரவில்லை. அதனால் தான் அவள் தன் தந்தை தமையன் இவர்களின் கோபத்திற்கும் வெறுப்புக்கும் அஞ்சாமல் தைரியத்தோடு அந்த இரவு பூபாலப்பிள்ளையைக் காப்பாற்றினாள். பிறகு பூபாலப்பிள்ளை தன்னை மணம்புரிந்தபோதும் அவளுக்கு அவர் செல்வவான் என்று தெரியாது. அவர் தமது தந்தையிடம் காட்டிய பக்தியைக் கண்டபோது அவளுக்கு அவர் விஷயத்தில் அதிக மதிப்பே யுண்டாயிற்று.

பிறகு அவரை விட்டுப் பிரிந்தபோது "நாம் விரும்பிய ஒருவனைக் கடவுள் முன்னிலையில் மணம்புரிந்து கொண்டோம், நமது தீவினைப் பயனால் அவனோடு கூடவிருந்து வாழ்வதற்கு அமைப்பில்லை. ஆயினும் இனி நாம் இன்னொருவனைக் கனவிலும் நினைக்கலாகாது" என்று தனக்

குள் தீர்மானித்துக்கொண்டே பூபாலப்பிள்ளை வீட்டை விட்டு வெளிப்பட்டாள். வெளிப்பட்டபின் தன் தந்தை தமையன்களிடம் திரும்பிச் செல்ல அவளுக்கு விருப்ப மில்லை. ஏனெனில் அவர்களுடைய நடக்கை யவளுக்குப் பிடிக்கவில்லை. அதோடு தான் ஒரு பணக்காரனை மணம் புரிந்துகொண்டதை யறிந்தால் அவர்கள் அக்கிரமமாக அவரிடம் பணம் பறிக்க முயல்வார்கள். ஆகையால் இனி யவர்கள் கண்ணுக்கு நாம் புலப்படலாகாது என்று தீர் மானித்துக்கொண்டாள்.

அதன் பிறகே இனி நாம் தனியே யெங்கு வசிப்பது என்று சிந்திக்கலானாள். அச்சமயமட்டும் ஒரு ஹோட்ட லில் போய் இரண்டு மூன்று நாட்கள் தங்கி யிருந்தாள். இதற்கிடையில் தீர ஆலோசித்தாள். "நாம் நியாயமாக நமது கணவனோடு கூடவே யிருக்கவேண்டும். இப்போது நாம் விரோதப்பட்டுப் பிரிந்து விடவில்லை. நமது கணவரு டைய மனோபாவம் மாறிவிடவும் கூடும். ஒரு சமயம் அவர் நம்மை யழைத்துக் கொள்ளக் கருதினும் கருதலாகும். தற்சமயம் அவருக்கு அதில் விருப்ப மில்லையாதலால் நாம் கூட விருப்பதை யவர் அறியலாகாது. அவருக்குத் தெரி யாமலே நாம் அவர் அருகிலேயே யிருந்து வந்தால் நாம் அவருக்கு உதவி செய்யத்தக்க சந்தர்ப்பம் தெய்வாதீன மாய் நேர்ந்தாலும் நேரும். அதுதான் சரி" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

ஆனால் அத்தீர்மானம் எப்படி நிறைவேறுவது? தான் பகிரங்கமாய் அவர் வீட்டிற்குச் சென்று என்னை யொரு வேலையில் வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்க முடியாது. அப்படிச் சென்றால் உண்மை வெளிப்பட்டு விடும். ஆகையால் கடைசியில் அவள் மனதில் ஒரு ஆலோசனை யுதித்தது. அதாவது, நாம் அவரை யறி

யாமலே அவர் வீட்டிற்குள்ளிருக்க வேண்டுமாயின் அவ் வீட்டிலிருக்கும் யாரேனுமொரு ஆள் நமக்கு உளவாயிருக்க வேண்டும். ஆகையால் தன்போல் ஒரு ஸ்திரீயாகிய தங்கம்மாளைக் கண்டு பேசுவதென்று தீர்மானித்தாள். ஒரு நாள் தங்கம்மாள் கடைவீதிக்குச் சென்றுகொண்டிருக்கையில் அவளைத் தொடர்ந்து சென்று ஒரு தனியிடத்திற் கழைத்துக்கொண்டு போய்க் கண்ணீர் விட்டுக்கொண்டே தன் சங்கதிகளை வெளியிட்டு, "இந்த விஷயத்தில் நீ எனக்கு உதவி செய்தால் நான் உயிருள்ள மட்டும் அந்த நன்றியை மறக்க மாட்டேன். ஆயினும் நீ செய்யுமுதவிக்கு ஆண்டவனே யுனக்கீடுசெய்ய வேண்டும்" என்று மொழிந்தாள்.

இராஜாமணியின் கணவன் பக்தியையும் சுயநலங் கருதாத குணத்தையும் கண்ட தங்கம்மாள் அவள் மேல் மிக்க இரக்கம் கொண்டு அவள் பிரியப்படி நடக்கச் சம்மதித்தாள். அந்த ஏற்பாட்டின்படி தங்கம்மாள் வீட்டினுள்ள தையல்வேலை முதலியவற்றைச் செய்யத் தனக்கு ஒரு உதவி வேண்டுமென்று பூபாலப்பிள்ளையிடம் கூறினாள். அச்சமயம் அவர் பங்கஜத்தின் காதலை யிழந்துவிட்டதொன்று, தான் ஒரு பெண்ணை மணம்புரிந்து அவளைப் பிரிந்து விட்டதொன்று ஆகிய இவ்வியாகூலங்களால் ஒரு விதப் பித்தங் கொண்டவர்போல் வீட்டு விஷயங்களில் சற்றேனும் கவலையின்றி யாவற்றையும் தமக்கு நம்பகமான காரியஸ்திரீயாகிய தங்கம்மாளிடம் விட்டு விட்டிருந்தபடியால், தங்கம்மாள் தையல் வேலைக்கு ஒரு ஆள் வேண்டும் என்தற்கு அவர் "சரி, உனக்குப் பிரியமான ஒரு பெண்ணை அமர்த்திக்கொள். மற்ற சங்கதிகளைப்பற்றி யென்னைக் கேட்கவேண்டாம்" என்று கூறி விட்டார்.

அதன்மேற்றான் இராஜாமணி அங்கு வசிக்கத் தொடங்கினாள். அதுமுதல் தன் கணவன் நடக்கைகளிலும்

குணங்களிலும் அவளுக்கு மிக்க திருப்தி யுண்டாயிற்று. கடைசியில் தன் கணவன் இப்போது தன்மேல் பூர்ண அன்புகொண் டிருக்கிறார். நாம் கூட இராவிட்டால் அவர் வாழ் நாட்களில் பெருந் துக்கமே ஏற்படுமென்று உணர்ந் தாள்.

---

## 30—வது அத்தியாயம்.

மேற்கண்ட காரணங்களால் இராஜாமணி, தன் தந்தை யும் தமையனும் அவ்வூர்ச் சிறைச் சாலையிலிருக் கிறார்களே என்ற ஒருமனக் கலக்கம் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் அவள் திருப்தியோடேயே யிருந்தாள். கள்ளர்கள் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொண்ட மறு நாள் காலை ஊரெங்கும் பெரிய வதந்தி யுண்டாய்விட் டது. சிலர் அவர்கள் இருந்த அறைகள் அப்படியப்படியே பூட்டப்பட் டிருந்தனவாம், அவர்கள் இருவரும் மட்டும் எப்படியோ மாயமாய்ப் போய் விட்டார்கள் என்றார்கள். சிலர் அவர்கள் இரவு கடைசியாகக் காவலன் வந்து பார்த்துத் திரும்பும்போது அவனைக் கொன்றுவிட்டு மதில் சுவரின் மேலேறி யோடி விட்டார்களாம் என்றார் கள். சிலர் இவையாவும் பொய், சிறைச்சாலை யதிகாரியே பணம் வாங்கிக்கொண்டு உளவாகவிருந்து அவர்களை விட்டு விட்டார் என்றார்கள்.

கடைசியில் காலை ஒன்பது மணிக்கு யாவர்க்கும் பட்வாடா செய்யப்பட்ட தினசரி விசேஷ அநுபந்தத்தில் பின்வரும் சமாசாரம் இருப்பதைப் பூபாலப்பிள்ளை வாசித்துத் தன் மனைவிக்குக் காட்டினார்:—

"சிறைச்சாலையில் ஆச்சரிய சம்பவம். கேசவன் சுப்பன் என்ற இரண்டு பிரசித்தி பெற்ற பாங்கிக் கொள்ளைக்

காரர்களும் மறுபடி சிறைச் சாலையினின்றும் தப்பி யோடி விட்டார்கள். கடந்த வாரமே அவர்கள் நம் நாட்டுப் பிரசித்தி பெற்ற துப்பறியும் சிங்கமாகிய ஆனந்தசிங்காலும் அவர் சீடராகிய ஜெயசிங்காலும் மிக்க சாமார்த்தியமாகப் பிடித்துச் சிறையில் அடைக்கப் பட்டார்கள் என்ற சங்கதி முன்னமே நமது பத்திரிகையில் வெளியிடப்பட் டிருக்கிறது. இரவு வானம் இருண்டு மழை தூறிக்கொண் டிருந்தது கள்ளருக்குத் தப்பித்துக் கொண்டுபோக அனு கூலமான சமயமாகவிருந்தது. கள்ளரில் மூத்தவன் தந்தை. வாலிபன் அவன் மைந்தன். தந்தை அவன் இருந்த அறை யின் சாளரக் கம்பிகளில் நான்கை யொருபக்க மறுத்துப் பின்பக்கம் வளைத்து விட்டுப் பின்னுலுள்ள முற்றத்தி லிறங்கி அங்கிருந்த பாராக்காரனைக்கட்டி அவன் வாயில் சீலை திணித்துப்போட்டு விட்டு எம்மாதிரியாகவோ மதில் சுவரைத் தாண்டிப் போய்விட்டான்.

அவன் மைந்தன் செய்தது பின்னும் துணிகரமான வேலை. அவன் இரவு எட்டுமணிக்குக் கடைசியாகக் காவலன் பார்த்துவிட்டுச் செல்ல வந்தபோது எவ்வா ருகவோ அவன் வாயில் துணியைத் திணித்துக் கயிற்ருல் அவனைக்கட்டி யறைக்குள் போட்டுவிட்டு அவன் உடை களையும் போர்வையும் அணிந்துகொண்டு சாதாரண வழி யாகவே வெளியிற் போய்விட்டிருக்கிருன்.

இவர்களிடம் பலமான கயிறும் இரும்புக் கம்பிகளை அறுக்க அரமும் இருந்திருக்கின்றன. சோதனை செய்யப் பட்டதில் இரும்பை மிருதுவாக்கும் ஏதோ வொருவிதத் திராவகத்தை யுபயோகிப்படுத்தி யிருக்கிருர்களென்று தெரிகிறது. அதுமட்டுமல்ல. அவர்களிடம் ஈட்டி கத்தி முதலிய ஆயுதங்களிருந்திருக்கின்றன. இவை யாவும் வெளியிலிருந்தே அவர்களுக்குக் கிடைத்திருக்கவேண்டும்.

அவை யெப்படி வந்தனவென்று இப்போது தெரியவில்லை. துறைமுகங்களுக்கெல்லாம் எச்சரிக்கை செய்யப்பட்டு அவர்கள் கண்டு பிடிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை யிருக்கிறது. இனி வரும் சங்கதிகள் வெளியிடப்படும்."

பூபாலப்பிள்ளை யிதை வாசித்தபின் மனவருத்தத்தோடு தன் மனைவிக்குக் காட்டினார். அவள் அதை வாசித்தபின் மிக்க மனத்துயரடைந்தாள். ஆயினும் தன் கொழுநரை நோக்கி "சரி, இனி அவர்கள் நாட்டை விட்டுப் போய்விடுவார்கள்" என்றாள்.

பூபாலப்பிள்ளை யதற்கு "எங்கேனும் அவர்கள் க்ஷேமமமாகவிருக்கவேண்டுமென்பதே என் கோரிக்கை. உன் மனதிற்கு விபாகூலத்தை யுண்டாக்காம லிருந்தார்களாயின் அதுவே யெனக்குப்போதும்" என்றார்.

அன்றிரவு பூபாலப்பிள்ளையின் வீட்டில் யாவரும் போசனம் முடிந்தபின் அவரவர்கள் அறைகளில் சயனித்துக்கொண்டார்கள். இரவு சுமார் பதினொருமணியிருக்கும். அச்சமயம் தெருக்கதவு தட்டப்பட்டது. உடனே யொரு வேலைக்காரன் போய்க் கதவைத் திறந்தான். இரண்டு ஆடவர்கள் வந்து "நாங்கள் பூபாலப் பிள்ளையின் மனைவியை முக்கியமான ஒரு அவசர விஷயமாய்ப் பார்த்துவிட்டுப் போகவேண்டும். இதோ இச்சீட்டைக் கொண்டுபோய் அந்தம்மாளிடம் கொடு" என்று ஒரு கடித உறையை யவனிட மளித்தார்கள்.

அவன் உடனே யதைக்கொண்டுபோய்த் தன் எஜமானியிடமளித்தான். இராஜாமணி யதைப் பிரித்துப் பார்த்தாள். அதில் கீழ்க் கண்டபடி வரையப்பட்டிருந்தது:—

"எங்கள் அன்பார்ந்த புத்திரிக்கும் தங்கைக்கும் நாங்கள் இருவரும் எழுதிக்கொள்வது:— இப்போது நாங்கள்

சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொண்டு கடவுள் தயவால் வந்து விட்டோம். ஆயினும் நாங்கள் கொடுத்த வாக்குத் தத்தப்படி இந்நாட்டைவிட்டுப் போய் விடுகிறோம். மறுபடி இங்கு வரமாட்டோம். உன் கணவர் எங்களுக்காக ஏதோ பணம் கட்டிவைப்பதாகவும், நாங்கள் நாட்டை விட்டுச் செல்லும்போது எங்களுக்கு அதைக் கொடுப்பதாகவும் முன்பு கூறினர். ஆனல் எங்கள் சிறைவாசம் முடியுமட்டும் இங்கு அடைபட்டுக் கிடக்க எங்களால் முடியாது. ஆகையால் எங்களுக்கு உதவுவதாக அவர் வாக்களித்த பணத்தைக் கொடுத்தால் நாங்கள் நாளையிரவு இங்கிருந்து புறப்படும் ஒரு கப்பலில் இரகசியமாய்ப் போய்விட ஏற்பாடு செய்திருக்கிறோம். இவ்வளவே சங்கதி. கடவுள் தயவால் நீயும் உன் கணவரும் நீடூழி சுகமாகவும் க்ஷேமமாகவும் வாழவேண்டுமென்பதே எங்கள் விருப்பம்.''

இக்கடிதத்தை யவள் வாசித்தபின் அவள் கண்களில் நீர் துளித்தது. அந்தோ! உத்தம மைந்தர்களுக்கும் சகோதரர்களுக்கும் தம் பெற்றோரிடமும் உடன் பிறந்தாரிடமும் அன்பு நிகழாதிருக்குமோ. அதை வாசித்த பின் இராஜாமணி சற்று சிந்தித்தாள். "இனி நாம் யோசிப்பதில் பயனில்லை. நமது கணவர் அபிப்பிராயப் படியே இவ்விஷயம் நடைபெறவேண்டும்'' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு அக்கடிதத்தைக் கொண்டு போய்த் தன் கணவரிடம் அளித்தாள்.

பூபாலப்பிள்ளை மிக்க பெருந்தன்மை வாய்ந்தவர். தன் மனைவிக்கு மனவருத்தம் நேரிடாவண்ணம் நடக்க வேண்டுமென்கிற எண்ணமுடையவர். அவர் அக்கடிதத்தை வாசித்தும் ஒரு நிமிடமே சிந்தித்து "சரி அவர்களை யுன் அறைக்கு வரும்படி செய். அவர்களுக்கு ஆகா

ரம் அளித்து உபசரி. கால்மணிக்குள் நான் அங்கு வருகிறேன்" என்றார்.

இராஜாமணி தன் பர்த்தாவின் மிக்க அன்பார்ந்த பெருந்தகைமையைத் தன் மனதிற்குள்ளேயே வியந்து கொண்டு "அப்படியே செய்வேன்" என மொழிந்தேகினள். இராஜாமணி யுடனே தன் தந்தைக்கும் தமையனுக்கும் ஆகாரம் அளித்தாள். அவர்களும் மனதாரப் புசித்தாயிற்று. அச்சமயம் அந்த அறையின் கதவு திறக்கப் பட்டதும் பூபாலப்பிள்ளை யுள்ளே வந்தார்.

அவரைக் கண்டதே கள்ளரிருவரும் எழுந்து நின்றார்கள். மூத்தவன் என்னமோகூற வாயெடுத்தான். அதை யறிந்த பூபாலப்பிள்ளை "அதிகமாய்ப் பேச இப்போது அவகாசமில்லை. உங்களைப் பிடிப்போர்க்கு பெருந்தொகையான பரிசளிக்கப் படுமென்று மாலைப் பிரசுரமான பத்திரிகைகளில் கண்டேன். நீங்கள் கூறியபடி எங்கேனும் அன்னிய நாடு சென்று இனியேனும் நல்வழியில் காலத்தைக் கழியுங்கள். இதோ இப்பையில் ஐயாயிரம் ரூபாயிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு நீங்கள் நல்ல வழியில் நடந்தால் அதிக செல்வம் சம்பாதிக்கலாம். இதோ இதைக்கொண்டு இவளுக்கு மட்டும் ஆசீர்வாதம் செய்து விடைபெற்றுச் செல்லுங்கள்" என்று தமது மடியிலிருந்த பணப்பையை யெடுத்து மூத்தக் கள்ளனிடமளித்து அறையை விட்டுச் சென்றார்.

பத்து நிமிடங்களில் கள்ளரிருவரும் பூபாலப்பிள்ளையின் மாளிகையிலிருந்து புறப்பட்டார்கள். பூபாலப்பிள்ளையின் நடக்கை அவர்கள் கல் மனதைக் கரையச் செய்தது. ஆனால் இராஜாமணியோ தன் கணவனுடைய பெருந்தகைமையையும் உதாரகுணத்தையும் அறிந்ததேயவள் மன நெகிழ்ச்சி யவள் கண்களில் நீர் வடியச் செய்

தது. அவள் சுமார் அரைமணி நேரம் அவ்வாறே பூரிப்படைந்த மனோநிலைமையிலிருந்தாள்.

அந்தோ! இவ்வுலகில் நிலையான அல்லது துக்கக் கலப்பில்லாத சந்தோஷம் எங்கேனும் எவ்விடத்திலேனும் உண்டோ? ஒருபோதும் இராதென்பது அனுபவமானதோர் உண்மை. ஏனெனில் இது மிசிரம உலகம். அதாவது சுகம் துக்கம், நன்மை தீமை, உயர்வு தாழ்வு, சிறிது பெரிது, நல்லது கெட்டது என்ற இரண்டும் கலந்ததேயாகும். ஆகையால் தன் கணவனுடைய குணத்தைப்பற்றி யானந்த பாஷ்பம் சிந்திக்கொண் டிருந்த இராஜாமணி மறு விநாடி "ஆ! நமது தந்தையும் தமையனும் நாட்டை விட்டே போய்விடப் போகிறார்கள். இனியவர்கள் முகத்தை நாம் காணப்போகிறதில்லை" என்று கருதியதே அவள் ஆனந்த பாஷ்பம் துக்க நீராக மாறி விட்டது. அவளையும் அவள் கணவனையும் அவ்வளவோடு விட்டுவிட்டுப் பணத்தை வாங்கிச் சென்ற கேசவன் சுப்பன் இருவரையும் கவனிப்போம்.

இந்திரபுரி நகரின் கிழக்கு ஓரத்தில் துறைமுகத்திற்குச் சுமார் ஒரு மைல் தூரத்தில் விவசாயிகள் தங்கள் விவசாயக் கருவிகளையும் கால் நடையும் சேர்த்து வைக்கும் ஒரு தனிவீடு புலங்களின் மத்தியில் இருக்கிறது. அது வீரப்பனும் இன்னொருவனும் கூட்டாக விவசாயம் செய்யும் பூமியிலிருக்கிறது. அத்தேசத்தில் குடியானவர்கள் தத்தம் பூமிகளில் தனியாக அத்தகைய கட்டிடங்களை வைத்துக்கொண்டிருப்பது வழக்கம்.

நாம் முன் கூறிய சம்பவங்கள் நடந்தபின் சுமார் இரவு ஒரு மணிக்குக் கேசவனும் அவன் மகனும் அத் தனிக் கட்டிடத்தை நோக்கிச் சென்று அதன் அருகில் நான்கு திக்குகளையும் நன்றாக நோக்கினார்கள். அங்கு ஒரு

வருமில்லை. அதன்மேல் கேசவன் அக்கட்டிடத்தின் பின் பக்கம் சென்று அங்கு வைக்கோல் போடப்பட்டிருக்கும் ஒரு அறைக்குள் நுழைந்து அதன் ஒரு மூலையில் மேல் கூரையில் தொங்கும் ஒருகயிற்றைப் பிடித்திழுத்தான். இரண்டொரு நிமிடங்களில் வெளிக் கதவு திறக்கப் பட்டதும் மறுபடி யுடனே மூடப்பட்டது. அதைக் கண்டதே யிதுகாறும் வெளியில் நின்றிருந்த சுப்பன் தன் தந்தை சென்றிருக்கும் இடத்திற்குச் சென்றான்.

அதன்பின் பின்பக்க மிருக்கும் கதவு திறக்கப்பட்ட தும் ஏழுமலை வெளியில் வந்து இவர்களிருவரையும் உள்ளே யழைத்துக்கொண்டு சென்றான். பின்பக்கம் முதலில் ஒரு விசாலமான அறையிருந்தது. அதில் விவசாயத்திற்கு வேண்டிய கருவிகள் நிறைய வைக்கப்பட்டிருந்தன. இவர்கள் மூவரும் அதைக்கடந்து ஒரு கூடத்திற்குச் சென்றார்கள். அந்த இடத்தில் பழைய சாமான்கள் போட்டுவைக்கப்பட் டிருந்தன. அங்கிருந்த ஒரு பெரிய பெட்டியைத் தூக்கினார்கள். அதன்கீழ் இருந்த கள்ளக் கதவு திறக்கப்பட்டதும் கீழ்நோக்கிச்செல்லும்படிகள் தோன்றின.

அப்படிகளின் வழியாய் மூவரும் இறங்கிச் சென்றார் கள். அங்கு கீழே ஒரு விசாலமான அறையிருந்தது. அதில் ஒரு பெரிய மேஜையும் நான்கு நாற்காலிகளும் இருந்தன. உள்ளேயிருந்த சுவர்களில் இரண்டுபெரிய அல மாரிகள் இருந்தன. அந்த அலமாரிகளில் சிற்றுண்டிவகை களும் குடிவகைகளும், நான்கைந்து கைத்துப்பாக்கி களும் இரண்டு ஈட்டிகளு மிருந்தன. அறையின் ஒரு மூலை யில் இரண்டு தகரப்பெட்டிகள் இருந்தன. அவற்றில் கேச வன் சுப்பன் இவர்கள் உடைகளிருந்தன. இதனால் இவர்

கள் பூபாலப்பிள்ளையின் வீட்டருகில் இராஜாமணியைக் கொண்டுபோய் வைத்துக்கொண் டிருந்தபோதே தங்கள் சாமான்களை அங்குவைத்து விட்டு வீரப்பனையும் ஏழுமலை யையும் தங்களுக்கு உளவாக வைத்துக்கொண் டிருந்தார் கள் என்று அறியக் கிடக்கிறது.

மூவரும் அங்கு உட்கார்ந்ததும் ஏழுமலை "நீங்கள் சென்றகாரியம் எப்படி நிறைவேறியது?" என்றான். கேச வன், "கடவுள் தயவால் அது நிறைவேறி விட்டது. உன் தந்தை சென்றவர் வந்து விட்டாரா?" என்றான். ஏழுமலை "அவர் இன்னும் வரவில்லை. ஒவ்வொரு விநாடி யும் அவரை யெதிர் பார்த்துக்கொண் டிருக்கிறேன்." என்றான். அதன் பிறகு அவன் அலமாரியைத் திறந்து அதிலிருந்து ஒரு சாராயப் புட்டியையும் சுருட்டுகளையும் எடுத்து மேஜைமேல் வைத்தான். உடனே மூவரும் சாரா யம் அருந்திவிட்டுச் சுருட்டுகளைப் பிடிக்கத் தொடங்கி னார்கள்.

ஏழுமலை கேசவனையும் அவன் மகனையும் நோக்கி "இப்போது இனி நீங்கள் என்னசெய்ய உத்தேசம் கொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினான்.

**கேசவன்:**—"நான் இந்தப் பூபாலப் பிள்ளையிடம் பெருந் தொகையான பணத்தைப் பிடுங்கலாம் என்று கருதி யிருந்தேன். ஆனால் அந்தத் துப்பறியும் ஆனந்த லிங்கும் அவன் ஆளாகிய ஜெயலிங்கும் எங்கள் சங் கதிகளை யெல்லாம் எப்படியோ தெரிந்துகொண் டிருக்கிறார்கள். அப்பள்ளத் தாக்கு விஷயம் தெரியு மல்லவா?" என்றதே!

ஏழுமலை, "போதும் போதும். அதைப்பற்றி யதிகம்

கூறவேண்டாம். அதைப்பற்றி யென்ன?" என்று நடுக்கத்தோடு கேட்டான்.

கேசவன் "அச்சங்கதி யவர்களுக்கு எப்படியோ நன்குகத் தெரிந்துவிட் டிருக்கிறது. ஆயினும் நீ யதிகக் கலக்க மடைய வேண்டாம். நாங்கள் தான் அதைச் செய்தோ மென்று மட்டுமே யவர்களிடம் ருசுவகப்பட் டிருக்கிறதே யன்றி நீங்கள் அதில் உதவிசெய்தது அவர்களுக்குத் தெரியாது. அச்சங்கதி யவர்கள் கையிலிருப்பதால் 'நீங்கள் உங்கள் சிறைவாசம் கழிந்ததே இத்தேசத்தை விட்டுத் தூரதேசம் போய்விட வேண்டும். இதற்கிடையில் இராஜாமணியின் கலியாண சங்கதியைப் பற்றி வெளியிட்டீர்களோ, உடனே அப்பள்ளத்தாக்குக்கொலைக் குற்றத்தை யுங்கள்மேல் சாட்டி யதை ருசுப்படுத்தி விடுவோம்' என்கிறுர்கள். ஆகையால் நாங்கள் அந்நிபந்தனையின்படி ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அந்தச் சனியன் போன்ற ஆனந்தசிங், நாம் ஒருவருக்கும் தெரியாத இரகசியம் என்ற இரகசியத்தை, யெப்படியோ அத் தாட்சிகளோடு அறிந்துகொண் டிருக்கிறுன். இனி வேறு வழியில்லை. நாங்கள் எங்கேனும் தூரதேசம் போய்ச் சேர வேண்டியதே. கழுத்தின்மேல் கத்தி தொங்கிக்கொண் டிருக்கும்படியான நிலைமையில் இந்த நாட்டி லிருப்பது மூடத்தனமாகும். உன் தந்தை சமீபத்தில் ஏதோ கப்பல்கள் வெளிநாட்டிற்குச் செல்வதாகவும் அதில் எங்களை யேற்றி யனுப்புவதாகவும், அதுகாறும் தம் உயிரைக் கொடுத்தேனும் எங்களைக் காப்பாற்றுவதாகவும் வாக்களித்தார். அவர் அப்படியே செய்வார் என்ற நம்பகம் எங்களுக்குண்டு" என்றுன்.

அவன் அவ்வாறு கூறி வாய்மூடும் சமயம் வெளியில் மேலே மணியடிக்கும் சத்தம்கேட்டது. ஏழுமலை என்

தந்தை தான் வருகிறார் என்றான். இரண்டு மூன்று நிமிடங்களில் நிலவறையின்படிக்கட்டுகளில் யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது. மூவரும் உற்றுக் கவனித்தார்கள். மறு நிமிடம் கதவு திறக்கப்பட்டதும் வீரப்பன் உள்ளே வந்தான்.

---

## 31—வது அத்தியாயம்.

வீரப்பன் நிலவறைக்குள் வந்ததே கேசவனும் அவன் மகனும் அவன் முகத்தை யாவலோடு நோக்கினார்கள். அவன் வதனத்தில் இருந்த சந்தோஷமான குறியைக் கண்டதே அவர்கள் இருவரும் மனமகிழ்ச்சியடைந்து ஏககாலத்தில் "நண்பரே! என்ன சங்கதி? என்ன ஏற்பாடு?" என்று ஒரே குரலாகக் கேட்டார்கள்.

**வீரப்பன்:**—"நண்பர்களே! கடவுள் யாவும் அனுகூலமாகவே முடித்தார். உங்களுக்குச் சற்றும் கலக்கம் வேண்டாம். சந்தோஷமாக நான் கூறுவதைக் கேளுங்கள்—" என்றதே,

கேசவன் "நண்பனே! இதற்காக முன்னாடி நாங்களிருவரும் எங்கள் ஆயுள் பரியந்தம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டவர்கள் என்பதையும் எங்கள் எண்ணிறந்த வந்தனத்தையும் அறிவித்து விடுகிறேன். இனி நீ செய்யும் நன்மையைக்கூறு" என்றான்.

**வீரப்பன்:**—"நற்காலமாய் நாளையிரவு ஒருமணிக்கு நமது இராஜாங்கத்தைச் சேர்ந்த குடியேற்று நாடுகளில் தென் ஆப்ரிகாவிலிருக்கும் குடியேற்ற நாட்டிற்கு ஒரு கப்பற் செல்கிறது. நீங்கள் அதில் ஏறிச் சென்று அங்கு போய்ச் சேர்ந்துவிட்டால் பிறகு உங்களை யெவரும் கண்டு பிடிக்க முடியாது. அக்கப்ப

லில் ஜீவாந்தர சிட்சை யடைந்த கைதிகள் கொண்டு போகப்படுகிறார்கள். கொஞ்சப் பிரயாணிகளே யேற்றப்படுகிறார்கள். ஆகையால் நான் மிக்க சிரமப் பட்டு நீங்கள் இருவரும் அதில் செல்லுமாறு பிர யாணச் சீட்டு வாங்கி விட்டேன்.

ஆயினும் ஒரு கஷ்டமிருக்கிறது. அதாவது சிறைச் சாலையிலிருந்து ஓடிவிட்ட இருவரைப் பற்றியும் துறை முகங்களுக்கெல்லாம் அடையாளங்களோடு அறிக்கை செய்யப்பட்டிருக்கிறது. துறைமுக அதிகாரிகள் அதன் நகலையெடுத்துத் துறைமுகத்திலிருந்து புறப்படும் ஒவ் வொரு கப்பலின் கப்பித்தானுக்கும் கண்டிப்பான கட்டளையோடு அனுப்பி யிருக்கிறார்கள் ஆகையால் நீங்களிருவரும் நான் எழுதிவைத்த குறிப்பின்படி மாறு வேடமணிந்து கொள்ளவேண்டும். அதற்காக மாறு வேடம் போடுவதில் கைதேர்ந்த ஒரு ஆளைக் கொண்டு வந்திருக்கிறேன். அவன் இப்போது உங்கள் உருவத்தின் உயரம் பருமன் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டு சென்றால் நாளை மாலை ஆறுமணிக்கு வந்து உடைமுதலிய வற்றால் உங்கள் உருவங்களை யடியோடு மாற்றி விடுவான். இனி யுங்கள் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டியதே'' என்றான்.

கள்ளரிருவரும் மிக்க சந்தோஷமடைந்து தங்கள் நண்பனுக்குத் தங்கள் நன்றியறிதலை வெளியிட்டு “நண் பனே ! நாங்கள் உன்னையே நம்பி யிருப்பவர்கள் என்பது நீ யறிந்த சங்கதியே. ஆகையால் இச்சமயம் எங்களைக் காப்பாற்ற வேண்டிய விஷயத்தில் நீ எப்படி யேற்பாடு செய்கிறாயோ அதன்படியே நாங்கள் நடந்துகொள்ளச்

சித்தமாக விருக்கிறேம். எதையும் உன் பிரியப்படி செய்'' என்றான்.

வீரப்பன் உடனே கேசவன் சுப்பன் இருவர்களேயும் அழைத்துக்கொண்டு நிலவறையிலிருந்து மேலே போய் ஒரு அறையில் உட்காரவைத்து விட்டு, முன்னே யிருக்கும் ஒரு அறைக்குச் சென்று சுமார் ஐம்பது வயதிற்கதிகமான ஒரு முதியோனை யழைத்து வந்து இவர்களிருவரையுங் காட்டி "இந்தக் கோழைகள் தான் கடன்காரனுக்குப் பயந்து கொஞ்சகாலம் மறைந்திருக்கக் கருதுகிறவர்களென்று நான் கூறியவர்கள். இன்னும் ஒருவாரத்திற்குள் இவர்கள் கொடுக்க வேண்டிய தொகைக்கு வந்துவிடும். அதற்குள் இவர்கள் பயப்படுகிறார்கள்...'' என்பதற்குள் அம்முதியோன் ''அய்யா! எனக்கு விவரம், காரணம் எவையும் கூறவேண்டாம். நான் கூறியபடி என் கட்டளையை அளித்து விடுங்கள். பிறகு இவர்கள் தாயார்களே வந்து பார்த்தாலும் இவர்களை யறிந்து கொள்ளாதபடிச் செய்து விடுகிறேன்'' என்றான்.

வீரப்பன் "சரி இந்தா நீ கூறியபடி பாதித்தொகை முன்னுடி வாங்கிக்கொள். நாளைமாலை ஆறு மணிக்குள் வந்து உன்வேலையை முடித்து விட்டு மற்றதை வாங்கிக் கொள்'' என்று தன் ஜேபியிலிருந்து பத்துரூபாய் எடுத்து அவனிடம் மளித்தான். அம்மனிதன் இரண்டு கள்ளருடைய உயரம் பருமன் முதலியவற்றை யளந்துகொண்டு நாளை மாலைச் சரியாய் ஆறுமணிக்கு வருவேன்'' என்று கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

மறுநாள் இரவு சுமார் பனிரண்டு மணியிருக்கும். அச்சமயம் வீரப்பன் வீட்டின்முன் இரண்டு புரவிகள் பூட்டிய ஒரு வண்டிவந்து நின்றதும் சாரதி அதினின்றும் இறங்கி வீட்டின் கதவைத் தட்டினன். அதற்குள் வண்டி

வந்த சத்தத்தைக் கேட்டதே கதவு திறக்கப்பட்டதும், வீரப்பன் வெளியில் வந்தான். இரண்டொரு நிமிடங்களில் நான்கு பெட்டிகள் வண்டியின் கூரைமேல்வைத்து கட்டப் பட்டன. மறுநிமிடம் மூன்றுபேர் வந்து வண்டியிலேறி ஞர்கள்.

அப்படி யேறியவர்களில் வீரப்பன் ஒருவன். மற்ற இருவரில் ஒருவன் பாஞ்சால நாட்டு உடையணிந் திருக்கி ருன். அவனுக்கு வயது அறுபதுக்குமே லிருக்கும்போல் தோன்றியது. அவன் குருமாரின் உடையணிந்திருந்தான். அதாவது உடையால் அவன் ஒரு குருவென்று தெரிந்தது. அவனுடைய நீளமான தாடியில் பாதி நரைத்ததா யிருந் தது. மற்றவன் அக்குருவின் வேலையாளான ஒரு வாலி பன். அவன் குருவின் ஜபமாலையையும் வேத புத்தகத்தை யும் கையில் வைத்துக்கொண்டு மிக்க பயபக்தியோடு குரு வின் பின்னுல் வந்து வண்டியில் ஏறினன்.

அரைமணி நேரத்திற்குள் அதாவது இரவு பனிரண் டரை மணிக்குள் வண்டி துறைமுகம் போய்ச் சேர்ந்த தும், சாமான்கள் துரிதமாகக் கப்பலில் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டன. கரையிலிருந்து கப்பலிலேறுமிடத்தி லுள்ள பலகைப் பாலத்தின் முனையில் போலீஸ் அதிகாரி கள் இருவர் நின்றுகொண்டு கப்பலில் ஏறுகிறவர்களை யெல்லாம் கவனித்து அவர்கள் பிரயாணச் சீட்டைப் பார்த்த பின்பே கப்பலிலேற விடுகிருர்கள்.

குருவும் அவர் ஆளும் செல்லும்போது வீரப்பன் அவர்கள் முன்னேசென்று பிரயாணச் சீட்டைப் போலீஸ் அதிகாரியிடம் நீட்டி ஞானதேசிக சுவாமிகளும் அவர் ஆளும் என்று பக்தியோடு கூறிவிட்டுப் பின்னுல் வரும் கள்ளச்சுவாமியை நோக்கி "வாருங்கள் சுவாமி, இது துரைத்தன உத்தரவின்படி நடக்கவேண்டிய சடங்கு.

தாங்கள் இதை அகௌரவமாகக் கருதவேண்டாம்" என்றான்.

கள்ளச்சுவாமிகள் "ஒருபோதும் அப்படிக் கருதமாட்டேன். அரசன் பாதுகாப்புத் தடையின்றிச் சரியாய் நடக்கவே வேண்டும். மைந்தர்களே! ஆண்டவன் உங்களுக்கு நல்லருள் புரிவாராக," என்று போலீஸ் அதிகாரிகளை நோக்கிக் கூறினார்.

அந்த மூடர்கள் தாங்கள் யாரைப் பிடிப்பதற்காக வந்து அங்கு நிற்கிறார்களோ அந்தக்கள்ளர் தங்களுக்கு எவ்வளவு சமீபத்தி லிருக்கிறார்கள் என்பதை எள்ளளவேனும் உணராதவர்களாய் குருவுக்கு மிக்க மரியாதையோடு வந்தன மளித்துவிட்டு எட்டவிலகி நின்றார்கள். வீரப்பன் குருவையும் அவர் ஆளையும் அழைத்துப் போய்க் கப்பலில் அவர்களுக் கமர்த்தப்பட்ட அறையில் விட்டுவிட்டுக் கப்பல் புறப்படும் சமயம் கரைக்கு வந்துவிட்டான். போலீஸாரும் கரைவந்து சேர்ந்தார்கள்.

வீரப்பன் முதலியவர்கள் கப்பலைவிட்டிறங்கிய பத்து நிமிடங்களுக்கெல்லாம் நங்கூரம் தூக்கப்பட்டதும் கப்பல் புறப்பட்டது. இவர்கள் போய்ச் சேரவேண்டிய இடம் இருபத்திரண்டு நாள் பிரயாணத்திலிருக்கிறது. புறப்படும்போது காற்று இவர்களுக்கு அனுகூலமாகவே யிருந்தபடியால் கப்பல் துரிதமாகவே சென்றது. கேசவனும் சுப்பனும் தங்கள் மாறுவேட உடையிலேயே யிருக்கத் தீர்மானித்ததாலும், கேசவன் ஒரு குருவென்று கப்பித்தான் முதல் யாவரும் நம்பி யிருந்தபடியாலும் அவனும் அவன் ஆளும் கப்பலின் எப்பாகத்திற்கும் எந்தவேளையிலும் செல்லலாகும்.

இதனால் நாலைந்து நாட்களுக்குள் கேசவன் கப்பலின் எல்லாப் பாகங்களையும் பார்த்துக் கொண்டதோடு அதி

லுள்ள ஆட்களையும் நன்றாக அறிந்துகொண்டான். அக் கப்பலில் வேலை செய்வோர் பன்னிரண்டு மாலுமிகள், மூன்று உத்தியோகஸ்தர்கள், ஒரு கப்பித்தான் ஆகப் பதினாறுபேர்கள். பிரயாணிகள் நான்கைந்து பேர்களே! ஏனெனில் அது வர்த்தகச் சாமான்களையும் சிறையாள ரையும் ஏற்றிச் செல்வதால் நாணயமான பிரயாணிகள் அதில் ஏறுவதில்லை. சிறையாளர் இருபத்திரண்டு பேர் இருக்கிறார்கள். இவர்களையன்றிக் கப்பல் சுத்தி செய் வோர், சமையல் செய்வோர், உக்கிராணக்காரன் இவர்கள் எட்டு பேர் இருக்கிறார்கள்.

சிறையாளர்களனைவரும் போக்கிரிகளும் பன்முறை சிறைவாசம் செய்த கள்ளர்களுமாகிய முரட்டுத் துணிகர மான பேர் வழிகள். ஏழெட்டுத் தினங்களுக்குள் கேச வன் அவர்களில் தனக்கு அறிமுகமானவர்கள் சிலர் இருக் கிறார்களென்றும் அக்கூட்டத்தில் அவர்களே செல்வாக் குடையவர்களென்றும் தெரிந்துகொண்டான். ஆனால் இவ னுடைய மாறுவேடத்தால் இவனை யவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அக்கைதிகளில் கேசவனுக்குத் தெரிந்த ஆட்களில் மூன்றுபேர் பிரபலமான கள்ளர்கள். அவர் கள் கன்னக்களவு, வழிப்பறி கொள்ளை, கள்ளக் கையொப்பம் வைத்தல், கொலை யிவற்றில் கைதேர்ந்த வர்கள். அவர்களில் ஒருவன் பெயர் ஈட்டி கந்தன். வயது நாற்பதிருக்கும். அவன் எந்நேரமும் மடியில் ஒரு சிறு ஈட்டியை வைத்துக்கொண்டிருந்து ஹோட்டலில் வருகிற வர்களில் பணம் வைத்துக்கொண்டிருக்கிறவர்களைத் தந் திரமாயறிந்துகொண்டு அவர்கள் தூங்கும்போது அவர் களை ஈட்டியால் குத்திக்கொன்று விட்டுச் சந்தடி செய்யா மல் அவர்கள் பொருளை யெடுத்துக்கொண்டு போய் விடுவான். இரண்டாவது ஆளின் பெயர் தளுக்கு தானப்

பன் அவனுக்கு வயது முப்பத்தைந்திருக்கும். கொஞ்சம் கல்வியும், பெரிய மனிதர்களைப்போல் நடிக்கும் சாமார்த்தியமும் உடையவன். வாய்ப்பேச்சால் எவரையும் மயக்கி விடத்தக்கவன். அவனுடைய நாகரீகமும் சுத்தமும் நாணயமுமான உடையையும் நடைபாவனைகளையும் கண்டதே எப்படிப்பட்டவர்களும் அவன் சகவாசத்தில் பிரியப்படுவார்கள். இருபதுபேர் இருக்கும் ஒரு கூட்டத்தில் அவன் சென்ற பத்து நிமிடங்களுக்குள், யாவரும் தன் பேச்சையே கேட்கும் படியான விதமாக அவர்கள் மனதைத் திருப்பி விடுவான்.

இவ்வாறு நடந்து கொண்டு அவர்களில் தக்க செல்வந்தர்கள் யாரென்று தெரிந்துகொண்டு அவர்களிடம் நெருங்கி நட்புச்செய்துகொண்டு அவர்கள் எந்தப்பாங்கியில் எவ்வளவு பணம் வைத்திருக்கிறார்கள், வீட்டில் அப்பாங்கிக்குப் பணம் வாங்க அனுப்பும் உண்டிச்சீட்டு எங்கு வைத்திருக்கிறார்கள் என்பனவற்றை யறிந்துகொண்டு அவர்களைப்போல் எழுதவும் கையொப்பம் வைக்கவும் சுலபமாகப் பழகிக் கொள்வான். பிறகு சமயம் பார்த்து அவர்கள் எழுதியதுபோல் பத்தாயிரம் இருபதினாயிரம் முதலிய ஒரு பெருந்தொகைக்கு உண்டி (செக்) எழுதிப் பணத்தை வாங்கிக்கொண்டு உடனே ஒரு அன்னிய நாட்டிற்குப் போய்விடுவான். அங்குச் செல்லும்போது வழியிலேயே பெயர் நடையுடைபாவனை உருவம் யாவற்றையும் அடியோடு மாற்றிக்கொள்வான். அவனுக்கு நான்கைந்து தேச பாஷைகள் தெரியும். ஒவ்வொன்றிலும் அத்தேசத்தாரைப் போலவே பேசுவான். இரண்டொரு வருடங்களில் கொள்ளை யடித்த பணத்தைச் செலவழித்து விட்டு மறுபடி யத்தேசத்தில் அதேமாதிரி செய்து இன்னொரு நாடு செல்வான்.

இப்படிப்பட்டவன் ஒரு பிரபுவின் வீட்டில் விருந்தாளியா யிருந்துகொண் டிருக்கையில் அவர் பத்தாயிரம் பவனுக்கு ஒரு உண்டி எழுதியதாக எழுதிப் பாங்கியில் மாற்றப்போனன். பொக்கிஷதாரன், "பத்து நிமிடங்கள் வெளியறையில் உட்காருங்கள். பணம் தருகிறேன்" என்றான். அவன் அப்படியே காத்துக்கொண் டிருக்கையில் தெய்வ கதியாக அப்பிரபுவே ஒரு அவசர காரியமாகப் பணம் வாங்க அங்கு வந்து விட்டார். பொக்கிஷதாரன் சாதாரணமாய்ப் பேசத்தொடங்கி, "தாங்கள் அனுப்பிய உண்டிக்கும் இன்னும் பணம் தரவில்லை. அந்த ஆள் காத்துக்கொண்டிருக்கிறார்" என்றான்.

இதைக்கேட்டதே, பிரபு தாம் ஒருவருக்கும் உண்டி தரவில்லையென்று தமக்குத் தெரியுமாதலால் "எங்கே அந்த உண்டி?" என்று இரகசியமாய்க் கேட்டு, அதைக் கொண்டு வந்த ஆள் யாரென்று தெரிந்துகொண்டதும், இவன் நாணயமான கள்ளனேயென்று அறிந்துகொண்டு உடனே போலீஸ் உத்தியோகஸ்தரை யழைத்து அவனைப் பிடித்துக் கொடுத்து விட்டார். அவன் விசாரணை செய்யப்பட்டபோது, போலீஸார் நெடுநாட்களாக இத்தகைய நான்கைந்து குற்றங்களுக்காகத் தேடிக்கொண்டிருக்கும், நாணயக்கள்ளனுகிய தனுக்கு தானப்பன் என்பவன் இவனேயென்று தெரிந்தது. யாவும் ருசுவானதால் இவன் தீபாந்தர சிட்சை யடைந்தான்.

மூன்றும் ஆசாமியின் பெயர் மாயரங்கன். அவனுக்கு வயது நாற்பதுக்குள்ளாகவே யிருக்கும். இவன் சாதாரணமான ஹோட்டல்களில் தன் கையாட்களை வைத்து யாரேனும் பிரயாணிகள் பணம் வைத்துக்கொண்டு தனி வழி செல்கிறார்களாவென்பதை யறிந்து கொண்டு அவர்கள் செல்லும் வழியில் பதுங்கியிருந்து கெட்டித்த துப்

பாக்கியைக் காட்டி பயமுறுத்தி அவர்கள் சொத்தைப் பறித்துக்கொண்டு மாயமாய்ப்போய்விடுவான். அவனுக்கு மாறு குரலில் பேச நன்றாகத்தெரியும். அதோடு அச்சமயம் மாறுவேடமும் முகமூடியுமணிந்திருப்பான். ஆகையால் இரண்டு நாழிகைகள் கழித்து அவர்கள் ஒரு ஹோட்டலில் போய்ச்சேர்ந்து அங்கு தங்களுக்கு நேர்ந்த விபத்தைக்கூறும்போது இவனும் எதிரில் உட்கார்ந்து யாவும் கேட்டு அவர்கள்மேல் இரக்கம் காட்டி அத்தகைய கள்ளரைப் பிடிக்காமல் விட்டிருக்கும் அதிகாரிகளை வைவான்.

இந்த மூன்று ஆசாமிகளையும் கேசவன் அறிந்துகொண்டதும் இரகசியமாய் அவர்களுக்குத் தன் உண்மையை யறிவித்தான். அதையறிந்ததும் அவர்களுக்குண்டான சந்தோஷத்திற்களவே யில்லை. ஏனெனில் அவர்கள் நாம் எப்படி இதை விட்டுத் தப்பித்துக்கொண்டு போவதென்று முன்னமே தங்களுக்குள் ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு வெளியிலிருந்து உதவி எள்ளளவும் இல்லை. ஆகையால் மிக்க கலவரத்தோடு ஆலோசனையி லிருந்தார்கள். ஆகையால் இப்போது கேசவன் கப்பலில் வந்திருப்பதை யறிந்ததே அவர்களுக்கு மிக்க சந்தோஷ முண்டாய் விட்டது. ஏனெனில் கேசவன் மிக்க புத்தி சாமார்த்திய முடையவனென்று அவர்களறிவார்கள்.

அதன்பிறகு கள்ளக் குருவிற்கும் அவர்களுக்கும் கடிதமூலமாகச் சமாசாரம் நடக்கத் தொடங்கியது. அக்கடிதங்களில் அடங்கிய சங்கதிகள் என்ன வென்பதைப் பற்றி இங்கு நாம் கூறவேண்டியதில்லை. பிறகு நடக்கும் சங்கதிகளால் அச்சங்கதிகள் வெளியாகும். கப்பல்போய்ச் சேரவேண்டிய இடம் இன்னும் ஏழுநாட்பிரயாண தூரத்தி

லிருக்கிறது. அதுகாறும் காற்று கப்பலுக்கு அனுகூல மாகவே வீசிக்கொண் டிருந்தது. அன்று மாலை மூன்று மணிக்கு வானத்தில் சூரியனைச் சுற்றி ஒரு வட்டமான சிவந்த சோதி தோன்றியது. அதோடு காற்றும் வேறு திக்கில் திரும்பி விட்டது.

இக்குறிகளைக் கண்டதே மாலுமிகளுக்கு ஒருவிதக் கலக்கம் உண்டாயிற்று. ஏனெனில் கப்பல் அப்போது இருக்கு மிடத்தில் இத்தகைய குறிகள் தோன்றினால் பயங்கரமான புயலடிக்குமென்று அவர்களுக்கு அனுபவத் தால் தெரியும். ஆகையால் அவர்கள் உடனே கப்பித்தான் கட்டளையின்படி கப்பலைப் பாதுகாக்க வேண்டிய வேலை யைச் செய்யத் தொடங்கினார்கள்.

மாலைப்பொழுது அமர அமர வானத்தில் கரியமேகங் கள் பெருங் கூட்டமாகச் சேரத் தொடங்கின. காற்றும் சற்று மும்முரமாக அடிக்க ஆரம்பித்தது. பகற்காலத்தை விட இராக்காலத்தில் புயற்காற்றில் கப்பல் அகப்படுவது மிக்க அபாயம். காற்று வரவர வேகத்தில் அதிகமாகத் தொடங்கியது. அக்காலத்தில் கப்பல்களில் செல்வோர் ஆயுதங்களோடேயே செல்வது வழக்கம். ஏனெனில் அப் போது கடற்கொள்ளைக்காரர்களும் அதிகமாகவிருந்தார் கள். அவர்களிடம் எல்லா நாட்டின் கொடிகளும் இருக் கும். தங்கள் கண்களுக்குப் புலப்படும் ஒரு கப்பல் என்ன கப்பலென்று தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்ப்பார்கள். அக்கப்பல் தங்களைவிடப் பலம் பொருந்தியதென்று அறிந்தால் அதன் வழியில் வராமல் வேறொரு நாட்டுக் கொடியைப் பறக்க விட்டுக்கொண்டு போய் விடுவார்கள்.

அப்படிக்கின்றி எதிர்ப்படுங் கப்பல் தாங்கள் கொள்ளை யடிக்கத்தக்க ஒரு வர்த்தகக் கப்பல் என்று கண்டால் உடனே அந்தக் கப்பல் எந்நாட்டுக் கப்பலோ அந்நாட்டுக்

கொடியையே பறக்க விட்டு, தங்களுக்கு ஆகாரமோ, நல்ல ஜலமோ, ஔஷதமோ ஏதோ உதவி வேண்டுமென்று கொடி காட்டிக்கொண்டு அக்கப்பலை நெருங்குவார்கள். அவர்கள் "அந்தோ நம் நாட்டுக் கப்பல். இதற்குதவி செய்ய வேண்டும்'' என்றெண்ணி அவர்கள் கப்பல் அருகில் வந்ததும் தங்கள் கப்பலை நிறுத்துவார்கள்.

அப்போது கள்ளர் உடனே தங்கள் கப்பலிலிருந்து படகுகளிலேறி அக்கப்பலில் பாய்ந்து அங்கிருப்பவர்களோடு சண்டையிட்டு அதிலுள்ள பிரயாணிகளையும் கப்பலையும் கொள்ளை யடித்துக்கொண்டு போவார்கள். ஆகையால் எல்லாக் கப்பல்களிலும் ஆயுதங்களிருக்கும்.

---

## 32—வது அத்தியாயம்.

அக்கப்பலிலிருக்கும் ஆயுதங்க ளெல்லாம் உக்கிராண அறையில் ஒரு பெட்டியிலிருக்கின்றன. அப்பெட்டியின் சாவியும் மற்ற முக்கியமான விடங்களின் சாவிகளும் எப்போதும் கப்பித்தான் வசத்திலேயே யிருக்கும். இவையாவும் கள்ளக் குரு கவனித்தறிந்து கொண்டான். பொழுது அமரும் சமயம் வானத்தில் கரியமேகங்கள் நிறைந்து விட்டன. மேல்காற்று அதிகரிக்கத் தொடங்கியது. ஆகையால் கப்பித்தான் இடைவிடாமல் கப்பலை பாதுகாப்பதற்கு அவசியமான கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கிறான். மாலுமிகள் அனைவரும் சுறுசுறுப்பாய் வேலை செய்துகொண் டிருக்கிறார்கள்.

கடல் அதிகமாகக் கொந்தளிக்கத் தொடங்கியது. பிரயாணிகள் பனையளவு உயர மெழும்பிவரும் அலைகளையும், கப்பல் மலைமேல் ஏறுவதுபோல உயரமான அலையின் உச்சியில் ஏறுவதையும் மறுநிமிடம் பாதாளத்தில்

அமிழ்ந்திவிடப் போவதுபோல் கீழ் இறங்குவதையும் பெரும் பீதியோடு பார்த்துக் கொண்டு கப்பலின் மேல் தட்டில் நிற்கிறார்கள். வரவரக் கப்பல் அதிகமாக அசையத் தொடங்கியது. அதோடு அலைகளும் மேல்தட்டில் புரளக் கூடியவைபோல் தோன்றின. ஆகையால் கப்பித்தான் பிரயாணிகளைக் கீழ்த்தட்டிலுள்ள அறைகளுக்குச் செல்லும் படி கூறினான். சற்று நேரத்திற்குள் இரவு தொடங்கவும் எங்கும் இருள்மயமாய் விட்டது. இனிமேல்தான் மிக்க ஆபத்து. ஏனெனில் காற்று தன் வல்லமைப்படி கப்பலை எத்திக்கிலாயினும் இழுத்துச் செல்லலாகும். ஒரு சமயம் மாறிமாறிப் பல திக்குகளில் இழுத்துச் செல்லும். கப்பல் இயற்கையாக நான்கு நாட்களில் செல்லக்கூடிய அவ்வளவு தூரத்திற்குப் புயற்காற்று ஒரே இரவில் கொண்டுபோய் விடும். இக்காரணங்களால் கப்பல் எந்த இடத்தில் இருக்கிறதென்றறிய முடியாமற் போய்விடும். இவைமட்டுமல்ல. இருட்டில கப்பல் ஒரு பாறையில் மோதிக்கொள்ளப் போவதாயினும் அதை யறிய முடியாது.

ஆகையால் கப்பித்தான் கப்பலைப் புயல்காற்று நிற்கு மட்டும் ஒரே இடத்தில் நிறுத்திவைக்கத் தீர்மானித்தான். ஆகவே உடனே நங்கூரங்களைப் பாய்ச்சும்படிக் கட்டளையிட்டான். மாலுமிகள் அவ்வாறே பாய்ச்சிக் கொண்டிருக்கக் கப்பித்தான் கப்பல் அச்சமயம் இருக்குமிடத்தைக் குறித்துக் கொள்வதற்காகத் தன் அறைக்குச் சென்றான். உத்தியோகஸ்தர்கள் மாலுமிகள் நங்கூரங்களை விடுவதையும் கப்பலின் அசைவுகளைக் கூடியவரையில் தடுப்பதற்காகச் செய்யும் காரியங்களையும் மேல்பார்வை பார்த்துக்கொண் டிருக்கிறார்கள்.

அச்சமயம் கள்ளக்குருவும் அவன் ஆளும் தங்கள் பெட்டியைத்திறந்து தங்களிட மிருந்த கைத்துப்பாக்கி

களை யெடுத்து உட்சட்டையின் சேபியில் மறைத்து வைத்துக்கொண்டு தங்கள் அறையைவிட்டு வெளிப்பட்டார்கள். இருவரும் அங்கிருந்து மேல் தட்டிற்குச் செல்லவேண்டுமாயின் நேரே யொருவழி யிருக்கிறது. அவர்கள் அவ்வழியைவிட்டுக் கைதிகள் அடைக்கப்பட்டிருக்கும் அறையினருகில் செல்லும்போது கேசவன் உள்ளிருந்த ஆட்களுக்கு ஒரு விதமான சமிக்கை காட்டிவிட்டு, அறையின் முன்பக்கம் வந்துநின்ற ஈட்டிக்கந்தனிடம் ஒருகடிதத்தை யளித்துவிட்டு உடனே தன் ஆளை யழைத்துக்கொண்டு துரிதமாக நேராய்க் கப்பித்தா னறைக்குச் சென்றான்.

கேசவனும் அவன் மைந்தனும் கப்பித்தா னறைக்குச் செல்லுப்போது, புயல்காற்று மும்முரமாயடிக்கிறது. கப்பலின் பலகைகள் கிர்கிர் என்று போடும் சத்தமும், பாய்மரங்களில் சத்தமும், மேல்தட்டில் ஆட்கள் தடதட வென்று கீழும்மேலும் ஓடும் சத்தமும் யாவும் சேர்ந்து ஒருவர் கூறுவது ஒருவருக்குக் கேட்காத விதமாய்ப் பயங்கரமான சத்தத்தை யுண்டாக்கின. இதனால் கேசவனும் சுப்பனும் கதவைத் திறந்துகொண்டு அறைக்குள் வந்ததைக் கப்பித்தான் அறிந்து கொள்ளவேயில்லை. அவர் அச்சமயம் தன் எதிரில் ஒரு மேஜைமேல் விரிக்கப்பட் டிருக்கும் பெரிய பூலோகப்படத்தை மிக்க கவலையோடு உற்றுநோக்கிக்கொண்டே யிருக்கிறார்.

இக்கள்ளர் உள்ளே செல்லும்போது கப்பித்தான் வாயிற்படியின் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டிருந்ததால் இவர்களைக் காணவில்லை அப்படிக் கண்டிருந்தால் அவர் இவர்கள்மேல் எள்ளளவு சந்தேகமும்படமாட்டார். அவர் மறுபக்கம் திருப்பிக்கொண் டிருந்தது கள்ளர்க்கு மிக்க அனுகூலமாகவிருந்தது. ஆகவே இருவரும் ஏககாலத்தில் அவர்மேல் புலிகள்போல் பாய்ந்து அவரைத்தரையில்

வீழ்த்தித் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி "நீ கூச்ச லிட்டால் மேல் தட்டில் கேட்காது. ஆயினும் நீ வாய் திறந்தையோ தட்சணம் உன் மூளை சிதறிவிடும்" என்று கூறி அவர் கால் கைகளைக் கட்டி விட்டார்கள். இவர்கள் யாரென்றறிந்ததே கப்பித்தானுக்குண்டான வியப்பும் பிரமையும் திகிலும் சொல்லமுடியாது. ஏனெனில் அவர், கேசவனை யொரு குருவென்றே யெண்ணியிருந்தார். ஆகை யால் இப்போது இவர்கள் நடக்கையைக் கண்டதே பெரும் பீதி யுண்டாகிவிட்டது. தன் வசத்தில் கைதிகள், மிக்க துஷ்டர்களும், போக்கிரிகளும், கள்ளருமானவர்கள் இருக்கிறார்கள். "ஓகோ! இவன் அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவனாகவே யிருக்கவேண்டும். இப்போது அவர் களை விடுதலைசெய்துவிட்டு இவர்கள் கப்பலைக் கொள்ளை யடித்துத் தங்கள் சுயாதீனமாக்கிக் கொள்வார்கள். அப் படிக்கின்றி இவர்களிருவருமட்டுமே துணிகரமாய் இத் தகைய காரியத்தைச்செய்ய ஒரு காரணமுமில்லை" என்று ஒரு விநாடியில் பளிச்சென்று அவர் மனதிற்றோன்றியது.

ஆகையால் அவர் இவர்கள் எண்ணத்தைப் பூரண மாக வறிந்து கொள்ளவேண்டுமென்ற கருத்தோடு கேச வனை இன்னமும் குருவென்றே நம்புகிறவர் போல், "சுவாமி! இதென்ன கனவோ நினைவோ? தாங்கள் என்னை யிப்படி அக்கிரமமாய் அதிலும் நன்றிமறந்து நடத்துவதை என்னால் நம்பக்கூடவில்லை. விளையாட்டென்றால் இது மிக்க அளவு மீறிய விளையாட்டாயிருக்கிறதே" என்றார்.

கேசவன் "ஏ கப்பித்தான்! இதில் விளையாட்டு ஒன்று மில்லை. நீயின்னமும் என்னை ஒரு குருவென்றே கருது வதாயின் நீ சுத்த முட்டாளாகவே யிருக்கவேண்டும். இப் போது நான் கூறுவதைக் கேள். இந்த விநாடி முதல் இக் கப்பல் என்னுடையது. உன் வரையில் நீ எனக்கு எவ்

விதத் தொந்தரையும் கொடாமல் இங்கேயே பேசாம லிருந்தால் உன்னைத் தக்க இடத்தில் கரையிறக்கிவிட்டு நீ யுன் ஊர்போய்ச் சேரப் போதுமான பொருளுமளிப் பேன். இன்றேல் இக்கடலே உன் மயான பூமியாகும். உன்னிடமுள்ள உத்தியோகஸ்தர் மாலுமிகள் யாவர்க்கும் இதே நிபந்தனை தான். இக்கப்பலில் சிறையாகவிருக்கும் யாவரும் என் நண்பர்கள் தான். இனி நல்ல அநுபவமுடைய கப்பித்தானாகிய உனக்கு நான் அதிகமாக ஒன்றும் கூற வேண்டுவதில்லை. இனிப் பேசாமலிரு. சாவி முதலியவை யிருக்கும் எல்லா விடங்களும் எனக்குத் தெரியும். உனக்கு எள்ளளவு தொந்தரவும் கொடேன்" என்றான்.

இவன் மொழிகளைக் கேட்ட கப்பித்தான் பெருந் திகிலடைந்தானெனினும் கோபாவேசத்தோடு "ஓ பரம துஷ்டனே! நான் உன் விஷயத்தில் உதவி செய்யக்கருதி யுன்னை யென் கப்பலில் ஏற்றி வந்தேன். அந்தக் கள்ளப் பயலாகிய வீரப்பன் பேச்சைக்கேட்டு நான் மோசம் போனேன். இச்சமயம் நீ ஜெயமடைவதாகவிருந்தாலும் இத்தகைய நன்றிகெட்ட அக்கிரமச் செய்கைக்கு அதி சீக்கிரத்தில் நீ தக்க தண்டனை யடையாமற் றப்பவே மாட் டாய். இது சத்தியம். இப்போது அபகரித்துக்கொள் ளும் இக்கப்பலாலும் இதிலுள்ள விலைமதிபெறும் பொருள் களாலும் நீ யொருகாலும் க்ஷேமமடைவாய் என்று கன விலும் கருதவேண்டாம். இத்தகைய அக்கிரமத்தை யாண்டவன் ஒருபோதும் சகித்துக்கொண் டிருக்கமாட் டார். இனி நீ செய்கிற காரியங்களைச்செய்" என்றார்.

கேசவன் உடனே அங்கு கப்பிதான் தன் மேஜையில் வைத்திருந்த கொத்துச் சாவியை யெடுத்துக்கொண்டு சுப்பனை யழைத்துக்கொண்டு சென்றான். அவன் நேராகக் கைதிகளிருக்கும் அறைக்குச்சென்று அந்த அறையைத்

திறந்து மூன்று பேரை யழைத்துக்கொண்டு உக்கிராண அறைக்குச்சென்று அங்கிருந்த ஆயுதப்பெட்டியை யடியோடு சிறைச்சாலை யறைக்குக் கொண்டுபோய்க் கைதிகளுக்கெல்லாம் ஆயுதம் அளித்துவிட்டுத் தான் மறுபடி சமாசாரமனுப்புமட்டும் அவர்கள் அங்கே யிருக்கவேண்டுமென்று மாயரங்கனையும் தனுக்குத் தானப்பனையும் அவர்களுக்குத் தலைவர்களாக வைத்துவிட்டு ஈட்டிக் கந்தனையும் வேறு நால்வரையும் தன்கூட அழைத்துக்கொண்டு கப்பித்தான் அறையின் முன் அறைக்குச் சென்று அங்கு சில கட்டளைகளோடு ஈட்டிக்கந்தனையும் வேறொருவனையும் வைத்துவிட்டு மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு மேல் தட்டிற்குச்சென்றான்.

மேல் தட்டில் இருக்கும் கப்பல் மாலுமிகள் உத்தியோகஸ்தர் அனைவரும் கப்பல் கவிழ்ந்துபோகாம லிருப்பதற்கு வேண்டிய வேலைகளைச் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக விருப்பதால் கப்பலின் கீழ்த்தட்டில் நடக்கும் சம்பவங்களும், கப்பித்தானுக்கு நேரிட்டிருக்கும் ஆபத்தும் ஒன்றுமே யவர்களுக்குத் தெரியாது. இத்தகைய நிலைமையில் கேசவன் தன் மைந்தனைத் தன் ஏற்பாடுகள் சரியாக நடக்கின்றனவாவென்று மேல் பார்வை பார்க்க விட்டு விட்டு தான் அழைத்து வந்த இரண்டு கைதிகளையு மிட்டுக்கொண்டு துரிதமாக மேல் தட்டிற்குச் சென்று முதலாவது உத்தியோகஸ்தனை நோக்கி "கப்பித்தான் தங்களை யுடனே வரும்படி கூறச்சொன்னார்" என்று சொல்லிவிட்டுத் தன்கூட வந்தவர்களில் ஒருவனை நோக்கி "கப்பித்தான் இப்போது இருக்கும் அறையில் இவரை யழைத்துக் கொண்டு போய் விடு" என்றான்.

அந்த உத்தியோகஸ்தன் துரிதமாக அந்தக் கைதியாகிய கள்ளன் கூடச் சென்றான். அவன் உத்தியோகஸ்

தனைக் கப்பித்தான் அறைக்கு முன்னறை முன் விட்டு "கப்பித்தான் இதில்தானிருக்கிறார்" என்றான். உத்தியோகஸ்தன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றதும் அங்கு ஒருவருமில்லாததைக் கண்டு அப்புறமிருக்கும் அறைக்குச் செல்ல இரண்டடி சென்றான். அதற்குள் கதவின்பின் மறைந்திருந்த ஈட்டிக் கந்தனும் அவன் ஆளும் அந்த உத்தியோகஸ்தன் பின்பக்கம் பாய்ந்து அவனைப் பிடித்துக் கீழே தள்ளி வாயில் துணியடைத்துக் கால் கைகளைக் கட்டிப்போட்டு விட்டார்கள். இச்சங்கதி முடிந்ததும் உத்தியோகஸ்தனை யழைத்துவந்தவன் கேசவனிடம் சென்று சங்கதி முடிந்ததென்று கூறினான். அதற்குள் முன் ஏற்பாட்டின்படி கட்டப்பட்ட உத்தியோகஸ்தன் தூக்கிக் கொண்டுபோய் கைதிகளிருக்கும் அறையில் போடப்பட்டான்.

பிறகு அரைமணி நேரத்திற்குள் மற்ற இரண்டு உத்தியோகஸ்தர்களையும் கேசவன் அவ்வாறே யேமாற்றிச் சிறைப்படுத்தி விட்டான். இனி யிருக்கிறவர்கள் மாலுமிகளே. அவர்களை வயப்படுத்துவது கஷ்டமல்ல. அவர்கள் யார் அதிகாரத்தி லிருக்கிறார்களோ அவர்களின் கீழ் வேலை செய்யக் கூடியவர்கள். முக்கியமானவர்களாகிய கப்பித்தானும் உத்தியோகஸ்தர்களும் சிறையாக்கப் பட்டதே கேசவன் கைதிகளுக் கெல்லாம் ஆயுதமளித்து அவர்களை மூன்று கூட்டமாகப் பிரித்து ஒன்றுக்குத் தனுக்குத் தானப்பனையும் இன்னொன்றுக்கு மாயரங்கனையும் தலைவர்களாக வைத்து, மூன்றாவதைத் தன் வசத்தில் வைத்துக் கொண்டான். ஈட்டிக் கந்தனையும் தன் அருகிலேயே வைத்துக்கொண்டான் ஏனெனில் ஈட்டிக்கந்தன் மிக்க பக்காப்பேர்வழி யாதலின் அவனைத் தனியே விடின் அவன் மோசம் செய்தாலும் செய்து விடுவான் என்று கேசவனுக்குத் தெரியும்.

186526

புதிய நாவல் பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

---

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனுதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணுபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

(இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000-இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பதின்மூன்று வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 56-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.